www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

சுராவின்

# சமூக அறிவியல்

## 10ஆம் வகுப்பு

## தொகுதி - 2

2019–20 ஆம் ஆண்டுக்கான
புதிய பாடத்திட்டத்தின்படி தயாரிக்கப்பட்டுள்ளது.

**சிறப்பம்சங்கள்**

- புதிய பாடத்திட்டத்தின்படி, பாடப்பகுதிகளிலுள்ள அனைத்து வினாக்களுக்கும் முழுமையான, எளிமையான விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- ஒவ்வொரு பாடத்திலும் மிகுதியான அளவில் கூடுதல் வினா விடைகள் தரப்பட்டுள்ளன.
- ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் அலகுத் தேர்வு வினாத்தாள் விடைகளுடன் தரப்பட்டுள்ளது.
- அரசு மாதிரி வினாத்தாள் 2019–20 விடைகளுடன் தரப்பட்டுள்ளது.
- சுராவின் மாதிரி வினாத்தாள் – 1 மற்றும் 2 விடைகளுடன் தரப்பட்டுள்ளது.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

# பொருளடக்கம்

## வரலாறு


| | | |
|---|---|---|
| அலகு 6 | ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக தமிழகத்தில் நிகழ்ந்த தொடக்ககால கிளர்ச்சிகள் | 1-14 |
| அலகு 7 | காலனியத்துக்கு எதிரான இயக்கங்களும் தேசியத்தின் தோற்றமும் | 15-30 |
| அலகு 8 | தேசியம்: காந்திய காலகட்டம் | 31-46 |
| அலகு 9 | தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்டம் | 47-60 |
| அலகு 10 | தமிழ்நாட்டில் சமூக மாற்றங்கள் | 61-74 |


## புவியியல்


| | | |
|---|---|---|
| அலகு 6 | தமிழ்நாடு - இயற்கைப் பிரிவுகள் | 75-94 |
| அலகு 7 | தமிழ்நாடு - மானுட புவியியல் | 95-112 |


## குடிமையியல்


| | | |
|---|---|---|
| அலகு 4 | இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை | 113-122 |
| அலகு 5 | இந்தியாவின் சர்வதேச உறவுகள் | 123-136 |


## பொருளியல்


| | | |
|---|---|---|
| அலகு 3 | உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து | 137-150 |
| அலகு 4 | அரசாங்கமும் வரிகளும் | 151-164 |
| அலகு 5 | தமிழ்நாட்டில் தொழில்துறை தொகுப்புகள் | 165-179 |

| | |
|---|---|
| அரசு மாதிரி வினாத்தாள் - 2019-20 | 180-192 |
| சுராவின் மாதிரி வினாத்தாள் 1 & 2 | 193-218 |




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

வரலாறு

# அலகு 6 ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக தமிழகத்தில் நிகழ்ந்த தொடக்ககால கிளர்ச்சிகள்



## கற்றலின் நோக்கங்கள்

- பாளையக்காரர் அமைப்பும், ஆங்கிலேயர்களுக்கு எதிரான பாளையக்காரர்களின் புரட்சியும்.
- வேலுநாச்சியார், பூலித்தேவர், கட்டபொம்மன், மருது சகோதரர்கள் போன்றோரின் ஆங்கிலேய எதிர்ப்புக் கிளர்ச்சிகள்.
- தென்னிந்தியாவில் ஆங்கிலேயரின் அடக்குமுறைக்கு பதிலடியாக அமைந்த வேலூர் புரட்சி.

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

**1. கிழக்கிந்திய கம்பெனியின் நாடுபிடிக்கும் ஆசையை எதிர்த்து நின்ற முதல் பாளையக்காரர் யார்?**

அ) மருது சகோதரர்கள் ஆ) பூலித்தேவர்
இ) வேலுநாச்சியார் ஈ) வீரபாண்டிய கட்டபொம்மன்

[விடை : ஆ) பூலித்தேவர்]

**2. கர்நாடகப் போர்களில் ஈடுபட்டிருந்தபோது ஏற்பட்ட செலவினங்களுக்காக கிழக்கிந்திய கம்பெனியிடமிருந்து கடனாக பணத்தை வாங்கியவர் யார்?**

அ) வேலுநாச்சியார் ஆ) பூலித்தேவர்
இ) ஆற்காட்டு நவாப் ஈ) திருவிதாங்கூர் மன்னர்

[விடை : இ) ஆற்காட்டு நவாப்]

**3. சந்தா சாகிப்பின் மூன்று முகவர்களோடும் நெருங்கிய நட்பினை ஏற்படுத்திக்கொண்டவர் யார்?**

அ) வேலுநாச்சியார் ஆ) கட்டபொம்மன் இ) பூலித்தேவர் ஈ) ஊமைத்துரை

[விடை : இ) பூலித்தேவர்]

**4. சிவசுப்ரமணியனார் எங்கு தூக்கிலிடப்பட்டார்?**

அ) கயத்தாறு ஆ) நாகலாபுரம் இ) விருப்பாட்சி ஈ) பாஞ்சாலங்குறிச்சி

[விடை : ஆ) நாகலாபுரம்]

**5. திருச்சிராப்பள்ளி சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட்டவர் யார்?**

அ) மருது சகோதரர்கள் ஆ) பூலித்தேவர்
இ) வீரபாண்டிய கட்டபொம்மன் ஈ) கோபால நாயக்கர் [விடை : அ) மருது சகோதரர்கள்]



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



# கூடுதல் வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும். 1 மதிப்பெண்**

1. பரம்பரை பரம்பரையாக ________ பாளையக்காரர்கள் இருந்திருக்கக் கூடும்.
அ) 75 ஆ) 72
இ) 65 ஈ) 80
[விடை: ஆ) 72]

2. ________ ஆற்காட்டு நவாபின் சகோதரர்.
அ) மாபூஸ்கான் ஆ) ஹைதர் அலி
இ) திப்பு சுல்தான் ஈ) முகமது அலி
[விடை: அ) மாபூஸ்கான்]

3. பூலித்தேவர் 1767இல் ________ என்பவரால் தோற்கடிக்கப்பட்டார்.
அ) கர்னல் ஹெரான்
ஆ) கேப்டன் கேம்ப்பெல்
இ) வில்லியம் ஓரம்
ஈ) வில்லியம் ப்ரௌன்
[விடை: ஆ) கேப்டன் கேம்ப்பெல்]

4. ________ தனது ஆட்சிகளோடு கோட்டைக்குள் புகுந்து கட்டபொம்மன் தப்ப உதவினார்.
அ) மருது சகோதரர்கள்
ஆ) இராமலிங்கனார்
இ) சிவசுப்ரமணியனார்
ஈ) ஊமைத்துரை [விடை: ஈ) ஊமைத்துரை]

5. ஜாக்சன் நிரந்தரப் பணி நீக்கம் செய்யப்பட்டு அவரது இடத்தில் புதிய ஆட்சியராக ________ என்பவர் நியமிக்கப்பட்டார்.
அ) எஸ்.ஆர்.லூஷிங்டன்
ஆ) எட்வர்ட் கிளைவ்
இ) வில்லியம் ப்ரௌன்
ஈ) பெனர்மன் [விடை: ஆ) எட்வர்ட் கிளைவ்]

6. கட்டபொம்மன் சகோதரர்களான ஊமைத் துரையும் செவத்தையாவும் ________ல் பாளையங்கோட்டைச் சிறையிலிருந்து தப்பினர்.
அ) பிப்ரவரி 1801
ஆ) பிப்ரவரி 1811
இ) பிப்ரவரி 1701
ஈ) பிப்ரவரி 1800
[விடை: அ) பிப்ரவரி 1801]

7. இராமநாதபுரத்தின் அருகே அமைந்துள்ள திருப்பத்தூர் கோட்டையில் ________ அன்று மருது சகோதரர்கள் தூக்கிலிடப்பட்டனர்.
அ) 24 நவம்பர் 1801
ஆ) 24 ஜனவரி 1801
இ) 24 அக்டோபர் 1801
ஈ) 24 டிசம்பர் 1801
[விடை: இ) 24 அக்டோபர் 1801]

8. ஒரு நல்லுறவுக் குழுவை அனுப்பிவைத்த ________ ஆல் கோபாலநாயக்கர் ஈர்க்கப்பட்டார்.
அ) ஹைதர் அலி ஆ) திப்பு சுல்தான்
இ) வீரபாண்டிய கட்டபொம்மன்
ஈ) பதேக் ஹைதர்
[விடை: ஆ) திப்பு சுல்தான்]

9. இந்திய நாட்டில் பிரிட்டிஷ் காலனியாதிக்க அதிகாரத்தை எதிர்த்த முதல் பெண் ஆட்சியாளர் ________
அ) முத்துலட்சுமி ஆ) குயிலி
இ) வேலுநாச்சியார் ஈ) லட்சுமி
[விடை: இ) வேலுநாச்சியார்]

10. ________ இராமநாதபுரம் கோட்டைக்குள் நுழைந்து கட்டபொம்மன் தப்ப உதவினார்.
அ) சிவசுப்பிரமணியம்
ஆ) மருது சகோதரர்கள்
இ) இராமலிங்கனார்
ஈ) ஊமைத்துரை [விடை: ஈ) ஊமைத்துரை]

11. தென்னிந்தியக் கூட்டமைப்பை சிவகங்கையில் ________ ஏற்படுத்தினர்.
அ) மருதுபாண்டியர்
ஆ) வீரபாண்டிய கட்டபொம்மன்
இ) கோபால நாயக்கர்
ஈ) பூலித்தேவன்
[விடை: அ) மருதுபாண்டியர்]

12. ________ இராமலிங்கரைத் தூதனுப்பி கட்டபொம்மனைச் சரணடையுமாறுக் கேட்டுக் கொண்டார்.
அ) வெல்லெஸ்லி பிரபு
ஆ) டல்ஹௌசி
இ) எஸ்.ஆர்.லூஷிங்டன்
ஈ) பானர்மென் [விடை: ஈ) பானர்மென்]

13. சிவசுப்ரமணியனார் ________இல் செப்டம்பர் 13 அன்று தூக்கிடலிடப்பட்டார்.
அ) நாகலாபுரம் ஆ) கயத்தார்
இ) எட்டயபுரம் ஈ) கள்ளர்பட்டி
[விடை: அ) நாகலாபுரம்]





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



(ix) ஆங்கிலேய ஆட்சியை ஏற்க வற்புறுத்தப்பட்டபோது அவர்கள் அதற்கு இணங்க மறுத்தனர். அதனால் 31 ஜுலை 1805 அன்று சங்ககிரி கோட்டையின் உச்சியில் அவர்கள் தூக்கிலிடப்பட்டனர்.

**2. ஜில்லஸ்பியின் கொடுங்கோன்மை ஆட்சிப் பற்றி எழுதுக.**

(i) கோட்டைக்கு வெளியேயிருந்த மேஜர் கூட்ஸ் ஆற்காட்டின் குதிரைப் படைத்தளபதியாக இருந்த கர்னல் ஜில்லஸ்பிக்குத் தகவல் கொடுத்தார்.

(ii) கேப்டன் யங்கின் தலைமையிலான குதிரைப்படைப்பிரிவுடன் காலை 9 மணி அளவில் கர்னல்ஜில்லஸ்பி கோட்டையை வந்தடைந்தார்.

(iii) இதற்கிடையே புரட்சிக்காரர்கள் திப்புவின் மூத்த மகனான ஃபதே ஹைதரை புதிய மன்னராகப் பேரறிக்கை செய்து மைசூர் சுல்தானின் புலி கொடியை கோட்டையில் ஏற்றியிருந்தனர்.

(iv) போர்விதிமுறைகள் எதையும் பொருட்படுத்தாத ஜில்லஸ்பி வீரர்களின் புரட்சியை வன்மையாக ஒடுக்கினார்.

(v) நேரில் கண்ட ஒருவரின் வாக்குமூலப்படி, கோட்டையில் மட்டும் எண்ணூறு வீரர்கள் பிணமாகக் கிடந்ததாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(vi) திருச்சிராப்பள்ளியிலும் வேலூரிலும் அறநூறு வீரர்கள் விசாரணையை எதிர்நோக்கி சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

☆ ☆ ☆

## அலகுத் தேர்வு

**நேரம் : 60 நிமிடங்கள்** **மதிப்பெண்கள் : 25**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (3 × 1 = 3)

1. கிழக்கிந்திய கம்பெனியின் நாடுபிடிக்கும் ஆசையை எதிர்த்து நின்ற முதல் பாளையக்காரர் யார்?
அ) மருது சகோதரர்கள்
ஆ) பூலித்தேவர்
இ) வேலுநாச்சியார்
ஈ) வீரபாண்டிய கட்டபொம்மன்

2. திருச்சிராப்பள்ளி சுதந்திர பிரகடனத்தை வெளியிட்டவர் யார்?
அ) மருது சகோதரர்கள்
ஆ) பூலித்தேவர்
இ) வீரபாண்டிய கட்டபொம்மன்
ஈ) கோபாலநாயக்கர்

3. வேலூர் புரட்சிக்குப் பின் திப்பு சுல்தானின் மகன்கள் எங்கு அனுப்பப்பட்டார்கள்?
அ) கல்கத்தா ஆ) மும்பை
இ) டில்லி ஈ) மைசூர்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** (3 × 1 = 3)

4. கட்டபொம்மனை சரணடையக் கோரும் தகவலைத் தெரிவிக்க பானெர்மென் _______ என்பவரை அனுப்பிவைத்தார்.

5. _______ என்பவர் புரட்சிக்காரர்களால் வேலூர் கோட்டையின் புதிய சுல்தானாக அறிவிக்கப்பட்டார்.

6. வேலூர் கோட்டையில் புரட்சியை ஒடுக்கியவர் _______ ஆவார்.

**III. பொருத்துக** (4 × 1 = 4)

7. சுபேதார் ஷேக் ஆதம் - அ) திண்டுக்கல்
8. கோபால நாயக்கர் - ஆ) வேலூர் கோட்டை
9. கர்னல்பேன்கோர்ட் - இ) இராமலிங்கனார்
10. பானெர்மென் - ஈ) வேலூர் புரட்சி

**IV. சுருக்கமாக விடையளிக்கவும்** (3 × 2 = 6)

11. திருச்சிராப்பள்ளி பிரகடனத்தின் (1801) முக்கியக் கூறுகளைத் தருக.
12. களக்காடு போரின் முக்கியத்துவம் யாது?
13. பாளையக்காரர்களின் கடமைகள் யாவை?





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

வரலாறு

# அலகு 7 காலனியத்துக்கு எதிரான இயக்கங்களும் தேசியத்தின் தோற்றமும்




## கற்றலின் நோக்கங்கள்

**கீழ்க்காண்பனவற்றோடு அறிமுகமாதல்:**

- ஆங்கிலேயருக்கு எதிரான பழங்குடியினர் மற்றும் விவசாயிகளின் போராட்டங்களின் தன்மை.
- 1857 இல் பெரும்கலகம் வெடிப்பதற்கான காரணிகளும் அதனைத் தொடர்ந்து ஆங்கிலேயர் இந்தியாவை ஆளும் தங்கள் அணுகுமுறையில் ஏற்படுத்திக்கொண்ட மாற்றங்களும்.
- இந்திய தேசிய காங்கிரஸ் உருவாக்கத்துக்கான காரணிகளும் தொடக்கால தேசியவாதிகளின் கண்ணோட்டமும்.
- 1905 இல் வங்கப்பிரிவினைக்கு பின்னாலிருந்த ஆங்கிலேயர்களின் பிரித்தாளும் கொள்கையும் வங்காளத்தில் சுதேசி இயக்கத்தின் தோற்றமும்.
- தன்னாட்சி (ஹோம் ரூல்) இயக்கத் தோற்றத்துக்கானப் பின்னணி.

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

**1. 1818ஆம் ஆண்டு கிழக்கு வங்காளத்தில் ஹாஜி ஷரியத்துல்லா கீழ்க்கண்டவற்றில் எதனைத் தொடங்கினார்?**

அ) வஹாபி கிளர்ச்சி ஆ) ஃபராசி இயக்கம்
இ) பழங்குடியினர் எழுச்சி ஈ) கோல் கிளர்ச்சி **[விடை : ஆ) ஃபராசி இயக்கம்]**

**2. 'நிலம் கடவுளுக்குச் சொந்தம்' என்று அறிவித்ததுடன் நிலத்தின் மீது வரிவிதிப்பதோ வாடகை வசூலிப்பதோ இறைச் சட்டத்திற்கு எதிரானது என்று கூறியவர் யார்?**

அ) டிடு மீர் ஆ) சித்து இ) டுடு மியான் ஈ) ஷரியத்துல்லா
**[விடை : இ) டுடு மியான்]**

**3. நிரந்தரக் குடியிருப்பின் கீழ் ஜமீன்களை உருவாக்கும் திட்டத்தின்படி தங்கள் சொந்த நிலத்தை விட்டு விரட்டப்பட்டவர்கள் யார்?**

அ) சாந்தலர்கள் ஆ) டிடு மீர் இ) முண்டா ஈ) கோல்
**[விடை : அ) சாந்தலர்கள்]**

**4. கீழ்க்காண்போரில் தீவிர தேசியவாதி யார்?**

அ) தாதாபாய் நௌரோஜி ஆ) நீதிபதி கோவிந்த் ரானடே
இ) பிபின் சந்திர பால் ஈ) ரொமேஷ் சந்திரா **[விடை : இ) பிபின் சந்திர பால்]**



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



(iii) இரண்டு அமைப்புகளும் சுதந்திரமாகச் செயல்பட்டன. பத்திரிக்கை, உரைகள், பொதுக்கூட்டங்கள், விரிவுரைகள், விவாதங்கள் மற்றும் தன்னாட்சிக்கு ஆதரவான சுற்றுப்பப்பயணம் ஆகியவை மூலமாக தீவிரப் பிரச்சார இயக்கத்தை நடத்த தன்னாட்சி இயக்கங்கள் பயன்பட்டன.

(iv) இளைஞர்களை அதிக எண்ணிக்கையில் சேர்ப்பதிலும் இவ்வியக்கங்களை ஊரகப் பகுதிகளுக்குக் கொண்டு சேர்ப்பதிலும் இரண்டு அமைப்புகளுமே வெற்றிபெற்றன.

## VIII. செயல்பாடுகள்

**1. 1858 முதல் 1919 ஆம் ஆண்டு வரை ஆங்கிலேய இந்தியாவில் இயற்றப்பட்ட சட்டங்களை அடையாளம் கண்டு, ஒவ்வொன்றைப் பற்றியும் சுருக்கமாக விவரிக்கவும்.**

(i) 1858 – இந்திய அரசுச் சட்டம்
(ii) 1861 – இந்திய கவுன்சில்கள் சட்டம்
(iii) 1883 – இல்பர்ட் மசோதா
(iv) 1908 – சோட்டா நாக்பூர் குத்தகை சட்டம்
(v) 1909 – மின்டோ மார்லி சீர்திருத்தங்கள்
(vi) 1919 – ரௌலட் சட்டம், மாண்டேகு செம்ஸ்ஃபோர்ட் சட்டம்

(i) **1858 – இந்திய அரசுச் சட்டம்:** 1858ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இந்திய அரசு சட்டத்தை பிரிட்டிஷ் நாடாளுமன்றம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, நாடாளுமன்றத்தால் நேரடியாக ஆட்சி அதிகாரம் செலுத்தப்படும் ஆங்கிலேய அரசின் காலனிகளில் ஒன்றாக இந்தியா அறிவிக்கப்பட்டது.


(ii) **1865 - முதலாவது வனச்சட்டம்:** ஆங்கிலேயர்கள் 1865ஆம் ஆண்டு முதலாவது வனச்சட்டத்தை நிறைவேற்றினார்கள். சுள்ளி எடுப்பது, கால்நடைத் தீவனம் மற்றும் தேன், விதைகள், மருத்துவ மூலிகைகள், கொட்டைகள் ஆகிய சிறிய அளவிலான வன உற்பத்திப் பொருட்களையும் வனப்பகுதிகளில் இருந்து சேகரிக்க இந்தச் சட்டம் வனத்தில் வாழ்வோருக்கு தடை விதித்தது.

(iii) **1908:** 1908இல் சோட்டா நாக்பூர் குத்தகைச் சட்டம் நிறைவேற்றப்பட்டு பழங்குடியினர் நிலத்தில் பழங்குடியினரல்லாதோர் நுழைவது தடுக்கப்பட்டது.

(iv) **1919 ரௌலட் சட்டம் / மாண்டேகு செம்ஸ்ஃபோர்ட் சட்டம்:** ஆங்கில அரசு 1919இல் கொடூரமான குழப்பவாத புரட்சிக் குற்றச்சட்டத்தை இயற்றியது. இச்சட்டத்தைப் பரிந்துரை செய்த குழுவினுடைய தலைவரின் பெயர் சர் சிட்னி ரௌலட் ஆவார். எனவே இச்சட்டம் பரவலாக ரௌலட் சட்டம் என அறியப்பட்டது.

1919இல் மாண்டேகு செம்ஸ்ஃபோர்ட் சீர்திருத்தங்களை ஆங்கிலேய அரசு அறிவித்தது. இதன் மூலம் இந்தியா தன்னாட்சி நோக்கி படிப்படியாக முன்னேற உறுதி கூறப்பட்டது.

**2. இந்திய வரைபடத்தில் 1857 ஆம் ஆண்டில் கிளர்ச்சி நடந்த முக்கிய இடங்களைக் குறிக்கவும்.**




**3. ஆங்கிலேயரின் காலனி ஆட்சிக்கு எதிரானப் போராட்டங்களில் பங்கேற்ற அனைத்து முன்னணி தலைவர்களின் படங்களை வைத்து ஒரு செருகேடு (ஆல்பம்) உருவாக்கவும்.**

மாணவர்கள் இச்செயல்பாட்டினை தாங்களாகவே செய்து பார்க்க வேண்டும்.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



# கூடுதல் வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும். 1 மதிப்பெண்**

1. பிளாசிப்போர் நடைபெற்ற வருடம் ________.
அ) 1757 ஆ) 1759
இ) 1857 ஈ) 1858
[விடை: அ) 1757]

2. இந்தியா கிழக்கிந்திய கம்பெனியால் கொள்ளையடிக்கப்படும் செயலானது மேலும் ________ ஆண்டுகளுக்கு நீடித்தது.
அ) 100 ஆ) 150
இ) 190 ஈ) 200
[விடை: இ) 190]

3. ஃபராசி இயக்கம் தொடங்கப்பட்ட ஆண்டு ________.
அ) 1828 ஆ) 1808
இ) 1858 ஈ) 1818
[விடை: ஈ) 1818]

4. ________ நூற்றாண்டின் தொடக்கத்தில் வெடிக்கத் தொடங்கிய விவசாயிகளின் கிளர்ச்சிகள் இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சி முடிவுக்கு வரும்வரை தொடர்ந்தன.
அ) 16 ஆ) 17
இ) 19 ஈ) 15
[விடை: இ) 19]

5. ஃபராசி இயக்கம் வங்காளத்தின் ________ பகுதிகளில் தொடங்கப்பட்டது.
அ) கிழக்கு ஆ) மேற்கு
இ) வடக்கு ஈ) தெற்கு
[விடை: அ) கிழக்கு]

6. 1839இல் ஷரியத்துல்லா மறைந்த பிறகு ஃபராசி கிளர்ச்சிக்கு அவரது மகன் ________ தலைமை ஏற்றார்.
அ) புட்டுமிர் ஆ) டுடு மியான்
இ) மிர்சா முண்டா ஈ) சித்து
[விடை: ஆ) டுடு மியான்]

7. ________ கிளர்ச்சி என்பது ஆங்கிலேய ஆட்சிக்கும் நிலப்பிரபுக்களுக்கும் எதிராகத் துவங்கப்பட்டதாகும்.
அ) ஃபராசி இயக்கம் ஆ) விவசாயிகளின்
இ) வஹாபி
ஈ) பழங்குடியினர் கிளர்ச்சி
[விடை: இ) வஹாபி]

8. ________ என்ற சொல் தனிப்பட்ட குழுக்களை குறிப்பதாகும்.
அ) பழங்குடியினர் ஆ) தலைவர்
இ) வர்த்தகர்கள் ஈ) வியாபாரிகள்
[விடை: அ) பழங்குடியினர்]

9. 1831-32ஆம் ஆண்டுகளில் நடந்த மிகப்பெரிய பழங்குடியினரின் கிளர்ச்சி ________ கிளர்ச்சியாகும்.
அ) கோல் ஆ) முண்டா
இ) சந்தால் ஈ) பெரும்
[விடை: அ) கோல்]

10. 1857ஆம் ஆண்டு மே மாதம் 11ந்தேதி ________ இருந்து தில்லி செங்கோட்டை நோக்கி சிப்பாய்கள் அணிவகுத்துச் சென்றனர்.
அ) மீரட் ஆ) வேலூர்
இ) லக்னோ ஈ) கல்கத்தா
[விடை: அ) மீரட்]

11. ஜான்சி ராணி லட்சுமி பாய் தனது வாரிசை தத்து எடுத்து கொள்ள அனுமதி தர மறுத்துவிட்ட வங்காள ஆளுநர் ________.
அ) டல்ஹெளசி ஆ) கர்சன்
இ) கானிங்
ஈ) வில்லியம் பெண்டிங்
[விடை: அ) டல்ஹெளசி]

12. ________ கிளர்ச்சி 1889ஆம் ஆண்டு தொடங்கியது.
அ) கோல்
ஆ) பழங்குடியினர்
இ) இண்டிகோ
ஈ) சந்தால் [விடை: இ) இண்டிகோ]

13. இந்திய தேசிய காங்கிரஸ் நிறுவப்பட்ட வருடம் ________.
அ) 1858 ஆ) 1857
இ) 1862 ஈ) 1885
[விடை: ஈ) 1885]

14. 1899இல் இந்தியாவில் அரசப் பிரதிநிதியாக ________ பிரபு நியமிக்கப்பட்டார்.
அ) வெல்லெஸ்லி ஆ) கர்சன்
இ) ரிப்பன் ஈ) டல்ஹெளசி
[விடை: ஆ) கர்சன்]





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



(iii) பிர்சா முண்டாவின் பிரபலத்தைப் பயன்படுத்தி மேலும் அதிக எண்ணிக்கையில் பிர்சா இன மக்களை இந்த நோக்கத்திற்காக ஒன்றிணைக்க முண்டா தலைவர்கள் முயன்றனர்.

(iv) இரவுக் கூட்டங்கள் பல நடத்தப்பட்டு கிளர்ச்சி ஒன்றுக்குத் திட்டமிடப்பட்டது.

(v) 1889ஆம் ஆண்டு கிறிஸ்துமஸ் நாளில் அவர்கள் வன்முறையை கையில் எடுத்தனர். கட்டடங்கள் தீக்கிரையாக்கப் பட்டன.

(vi) கிறித்துவ தூதுக்குழுக்கள் மற்றும் கிறித்துவர்களாக மதம் மாறிய முண்டாக்கள் மீது அம்பு எறிந்து தாக்குதல்கள் நடந்தன. அதன்பின் காவல் நிலையங்கள் தாக்கப்பட்டன.

(vii) அரசு அதிகாரிகளும் தாக்கப்பட்டனர். அடுத்த சில மாதங்களுக்கு இதுபோன்ற தாக்குதல்கள் தொடர்ந்து நடத்தப்பட்டன. இறுதியாக இந்த கிளர்ச்சி முடக்கப்பட்டது.

(viii) 1900ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் கைது செய்யப்பட்ட பிர்சா முண்டா பின்னர் சிறையில் உயிர்நீத்தார். பழங்குடியினரின் தலைவராக அறியப்பட்ட பிர்சா முண்டா இன்றளவும் பல நாட்டுப்புறப் பாடல்களில் போற்றப்படுகிறார்.

(ix) இந்த முண்டா கிளர்ச்சியை அடுத்து ஆங்கிலேயே அரசு பழங்குடியின நிலம் பற்றிய கொள்கையை வகுக்க முனைந்தது. 1908இல் சோட்டா நாக்பூர் குத்தகைச் சட்டம் நிறைவேற்றப்பட்டு பழங்குடியினர் நிலத்தில் பழங்குடியினரல்லாதோர் நுழைவது தடுக்கப்பட்டது.

2. **1857ஆம் ஆண்டு நடந்த கிளர்ச்சியின் தோல்விக்கான காரணங்கள் பற்றி விவரிக்கவும்.**

(i) 1857ஆம் ஆண்டு நடந்த கிளர்ச்சி ஒருங்கிணைக்கப்பட்டது மற்றும் திட்டமிடப் பட்டது என்பதை நிரூபிக்க எந்தவித ஆதாரமும் இல்லை. அது தானாக நடந்தது. ஆனால் தில்லி முற்றுகை இடப்பட்ட பிறகு அண்டை மாநிலங்களின் ஆதரவைப் பெற முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

(ii) மேலும் ஒருசில இந்திய மாநிலங்களைத் தவிர இந்தக் கிளர்ச்சியில் பங்கேற்க இந்திய இளவரசர்களிடம் பொதுவாக ஆர்வம் குறைந்து காணப்பட்டது.

(iii) காலனி அரசுக்கு விசுவாசமாக அல்லது ஆங்கிலேய அதிகாரத்தை அறிந்து அச்சப்பட்டு இந்திய அரசர்களும், ஜமீன்தாரர்களும் ஒதுங்கியிருந்தனர்.

(iv) பெரும்பாலும் அவர்கள் ஐந்தாம் படையாக செயல்பட்டனர். கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களும் குறைந்த அளவே ஆயுதங்கள் மற்றும் வெடிப்பொருட்கள் கிடைத்தும் அல்லது கிடைக்காமலோ இருந்தனர்.

(v) ஆங்கில அறிவு பெற்ற நடுத்தர வகுப்பும் கிளர்ச்சிக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை.

(vi) மத்திய தலைமை இல்லாததும் கிளர்ச்சி தோல்வியடைய முக்கிய காரணமாக அமைந்தது.

(vii) தனிநபர்கள், இந்திய அரசர்கள் மற்றும் ஆங்கிலேய அரசுக்கு எதிராக சண்டையிட்ட பல்வேறு சக்திகளை ஒன்றிணைக்க பொதுவான செயல்திட்டம் ஏதுமில்லாமல் போனது.

(viii) இறுதியில் ஆங்கிலேய ராணுவம் கிளர்ச்சியை கடுமையாக ஒடுக்கியது.

(ix) ஆயுதங்கள் கிடைக்கப்பெறாமை, அமைப்பாற்றல் இன்மை, ஒழுக்கமின்மை, உதவியவர்களால் காட்டிக் கொடுக்கப்பட்டது ஆகிய காரணங்களால் கிளர்ச்சித் தலைவர்கள் தோல்வி அடைந்தனர்.

(x) 1857ஆம் ஆண்டின் பிற்பகுதியில் தில்லி ஆங்கிலேய துருப்புக்களால் கைப்பற்றப்பட்டது. சிறைபிடிக்கப்பட்ட பகதூர் ஷா பர்மாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

☆ ☆ ☆





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

வரலாறு

# அலகு 8 தேசியம்: காந்திய காலகட்டம்



## கற்றலின் நோக்கங்கள்

**நாம் கீழ்க்கண்டவைகளைப் பற்றி அறிந்து கொள்ள:**

- இந்திய விடுதலைப் போராட்டத்தில் காந்திய காலகட்டம்
- இந்தியாவில் மக்களை ஒன்றிணைக்க அகிம்சை மற்றும் சத்தியாகிரகம் ஆகிய காந்தியக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டு சோதிக்கப்பட்ட காலகட்டம்
- சம்பரான் மற்றும் ரௌலட் சட்டம் ஆகியவற்றுக்கு எதிரான வன்முறையற்ற போராட்டங்கள்.
- ஒத்துழையாமை இயக்கம் மற்றும் அதன் வீழ்ச்சி
- தீவிரத்தன்மை கொண்டவர்களும் தீவிர தேசியவாதப் போக்கு உடையவர்களின் தோற்றமும் விடுதலைப் போராட்டத்தில் அவர்கள் ஆற்றிய பங்கும்.
- சட்டமறுப்பு இயக்கத்தின் தொடக்கம்
- தனித்தொகுதிகள் குறித்த சர்ச்சை மற்றும் பூனா ஒப்பந்தம் கையெழுத்திடப்படுதல்.
- மாகாணங்களில் முதலாவதாக அமைந்த காங்கிரஸ் அமைச்சரவைகள் மற்றும் வெள்ளையனே வெளியேறு இயக்கம் தோன்றுவதற்கான சூழ்நிலைகள்
- இந்தியத் துணைக்கண்டத்தை இந்தியா–பாகிஸ்தான் என இரண்டாகப் பிரிவினை செய்ய வழிவகுத்த வகுப்புவாதம்.

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

**1. அமிர்தசரஸில் ரௌலட் சட்ட எதிர்ப்புப் போராட்டங்களின் போது கைது செய்யப்பட்டவர் யார்?**

அ) மோதிலால் நேரு ஆ) சைஃபுதீன் கிச்லு
இ) முகம்மது அலி ஈ) ராஜ் குமார் சுக்லா [விடை : ஆ) **சைஃபுதீன் கிச்லு**]

**2. இந்திய தேசிய காங்கிரசின் எந்த அமர்வில் ஒத்துழையாமை இயக்கத்துக்கு அனுமதி வழங்கப்பட்டது?**

அ) பம்பாய் ஆ) மதராஸ் இ) லக்னோ ஈ) நாக்பூர் [விடை : ஈ) **நாக்பூர்**]

**3. விடுதலை நாளாக கீழ்க்கண்டவற்றில் எந்த நாள் அறிவிக்கப்பட்டது?**

அ) 1930 ஜனவரி 26 ஆ) 1929 டிசம்பர் 26
இ) 1946 ஜுன் 16 ஈ) 1947 ஜனவரி 15 [விடை : அ) **1930 ஜனவரி 26**]

**4. முதலாவது வனங்கள் சட்டம் எந்த ஆண்டில் இயற்றப்பட்டது?**

அ) 1858 ஆ) 1911 இ) 1865 ஈ) 1936 [விடை : இ) **1865**]



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



(iv) ரஸ்கின் அவர்களால் பெரிதும் ஈர்க்கப்பட்ட காந்தியடிகள் பீனிக்ஸ் குடியிருப்பையும் (1905) டால்ஸ்டாய் பண்ணையையும் (1910) நிறுவினார். சமத்துவம், சமூக வாழ்க்கை, தொழில்மீது மரியாதை ஆகிய நற்பண்புகள் இந்தக் குடியிருப்புகளில் ஊக்கப்படுத்தப்பட்டன. சத்தியாகிரகிகளுக்கு இவை பயிற்சிகளங்களாகத் திகழ்ந்தன.

(v) தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் தங்கியிருந்த காலகட்டத்தில் அவர் பலவற்றை அனுபவபூர்வமாகக் கற்றுக் கொண்டார். பல்வேறு மதங்களையும் பகுதிகளையும் மொழிக்குழுக்களையும் சுரண்டலுக்கு எதிரான போராட்டத்தில் ஒன்றிணைக்க முடியும் என்று காந்தியடிகள் உணர்ந்து கொண்டார். உலகப் போர் வெடித்த பிறகு காந்தியடிகள் இந்தியா திரும்பினார்.

**இந்தியாவில் காந்தியடிகள் நடத்திய தொடக்க கால சத்தியராகிரகங்கள்:**

முந்தைய இந்திய வருகைகளின் போது காந்தியடிகள் தான் சந்தித்த கோபால கிருஷ்ண கோகலே மீது பெரும் மரியாதை கொண்டு அவரையே தமது அரசியல் குருவாக ஏற்றார். அவரது அறிவுரையின்படி அரசியலில் ஈடுபடுமுன் நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் காந்தியடிகள் பயணம் மேற்கொண்டார். இதனால் மக்களின் நிலையை அவர் அறிந்து கொள்ள வழிபிறந்தது.

**சாம்பரான் சத்தியாகிரகம்:**

(i) பீகாரில் உள்ள சம்பரானில் 'தீன் காதியா' முறை பின்பற்றப்பட்டது. இந்த சுரண்டல் முறையில் இந்திய விவசாயிகள் தங்களின் நிலத்தின் இருபதில் மூன்று பங்கு பகுதியில் அவுரி (இண்டிகோ) பயிரிட வேண்டும் என்று ஐரோப்பியப் பண்ணையாளர்கள் அவர்களைக் கட்டாயப்படுத்தினர்.

(ii) சம்பரானைச் சேர்ந்த விவசாயியான ராஜ்குமார் சுக்லா, சம்பரானுக்கு வருகை புரியுமாறு காந்தியடிகளைக் கேட்டுக் கொண்டார். சம்பரானை காந்தியடிகள் சென்று சேர்ந்தவுடன், அங்கிருந்து உடனடியாக வெளியேறுமாறு காவல் துறையினர் அவரைக் கேட்டுக் கொண்டனர். அதற்கு அவர் மறுத்ததையடுத்து வழக்கைச் சந்திக்குமாறு பணிக்கப்பட்டார்.

(iii) இந்தச் செய்தி காட்டுத்தீ போன்று பரவியதை அடுத்து ஆயிரக்கணக்கானோர் அந்த இடத்தில் காந்தியடிகளுக்கு ஆதரவாகக் கூடினர். உத்தரவுக்குக் கீழ்ப்படிய மறுத்தது குறித்து காந்தியடிகள் மன்னிப்புக் கோரியதை அடுத்து வழக்கு திரும்பப் பெறப்பட்டது.

(iv) சம்பரான் சத்தியாகிரகத்தின் வெற்றியை அடுத்து 1918இல் அகமதாபாத் மில் வேலைநிறுத்தம், 1918இல் கேதா சத்தியா கிரகம் ஆகியன காந்தியடிகளை ஒரு மக்கள் தலைவராக உருவாக்கின. முந்தைய தலைவர்களைப் போலல்லாமல் நாட்டு மக்களை ஒன்றுதிரட்டும் பணியில் காந்தியடிகள் தம் திறமையை வெளிப்படுத்தினார்.

**2. காந்திய இயக்கத்தின் ஒரு சிறந்த உதாரணமான சட்டமறுப்பு இயக்கம் குறித்து விரிவாக ஆராயவும்.**

(i) காந்தியடிகள் சட்டமறுப்பு இயக்கத்தைத் தொடங்கினார். உப்பு மீதான வரியை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கை ஒரு அறிவுபூர்வமான முடிவாகும்.

(ii) காந்தியடிகள் 1930 மார்ச் மாதம் 12ஆம் நாள் 78 பேர்களுடன் சபர்மதி ஆசிரமத்திலிருந்து தனது புகழ்பெற்ற தண்டி யாத்திரையைத் தொடங்கினார்.

(iii) இவர் தனது 61வது வயதில் 24 நாட்களில் 241 மைல் தொலைவு யாத்திரையாக நடந்து சென்று 1930 ஏப்ரல் 2ஆம் நாள் மாலை தண்டி கடற்கரையை அடைந்தார். அடுத்த நாள் காலை ஒரு கைப்பிடி உப்பை கையில் எடுத்து உப்புச் சட்டத்தை மீறினார்.

**மாகாணங்களில் உப்புச் சத்தியாகிரகம்:**

(i) தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளியில் இருந்து வேதாரண்யம் வரை இதேபோன்ற ஒரு யாத்திரையை சி. ராஜாஜி மேற்கொண்டார். கேரளா, ஆந்திரா மற்றும் வங்காளத்திலும் உப்பு சத்தியாகிரக யாத்திரை நடந்தன. வடமேற்கு எல்லை மாகாணத்தில் கான் அப்துல் கஃபார்கான் என்பவர் இந்த இயக்கத்திற்கு தலைமை ஏற்றார்.

(ii) காந்தியடிகள், ஜவஹர்லால் நேரு, கான் அப்துல் கஃபார்கான் மற்றும் இதர தலைவர்கள் கைதானார்கள்.





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



**சம்பரான் சத்தியா கிரகம்:**

(i) பீகாரில் உள்ள சம்பரானில் 'தீன் காதியா' முறை பின்பற்றப்பட்டது. இந்த சுரண்டல் முறையில் இந்திய விவசாயிகள் தங்களின் நிலத்தில் இருபதில் மூன்று பங்கு பகுதியில் அவுரி பயிரிட வேண்டும் என்று ஐரோப்பிய பண்ணையாளர்கள் அவர்களைக் கட்டாயப்படுத்தினர்.

(ii) இதை எதிர்த்த காந்தியடிகளுக்கு ஆதரவாக ஆயிரக்கணக்கானோர் அந்த இடத்தில் கூடினர். இண்டிகோ பண்ணையாளர்கள் விவசாயிகளின் மீது நடத்திய அடக்குமுறையை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் 'தீன் காதியா' முறையை ரத்து செய்ய அந்தக் குழு பரிந்துரைத்தது.

**ஜாலியன் வாலாபாக்:**

(i) அமிர்தசரஸில் உள்ள ஜாலியன் வாலாபாக்கில் 1919 ஏப்ரல் 13ஆம் நாள் ஒரு பொதுக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ii) இந்தக் கூட்டம் பற்றி அறிந்தவுடன் அந்த இடத்தை பீரங்கி வண்டி மற்றும் ஆயுதமேந்திய வீரர்களுடன் ஜெனரல் ரெஜினால்டு சுற்றி வளைத்தார். பின்னர் 10 மணித்துளிகளுக்கு மேலாக துப்பாக்கிச் சூடு நிகழ்ந்தது.

**சௌரி சௌரா:**

1922 பிப்ரவரி 5ஆம் நாள் தற்போதைய உத்திரப்பிரதேசத்தில் உள்ள கோரக்பூர் அருகே சௌரி சௌரா என்ற கிராமத்தில் தேசியவாதிகள் நடத்தியப் பேரணி காவல் துறையினரின் தூண்டுதலில் வன்முறையாக மாறியது.

**உப்புச் சத்தியாகிரகம்:**

(i) தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளியில் இருந்து வேதாரண்யம் வரை இதே போன்ற ஒரு யாத்திரையை சி.ராஜாஜி மேற்கொண்டார்.

(ii) காந்தியடிகள் 1930 மார்ச் மாதம் 12ஆம் நாள் 78 பேர்களுடன் சபர்மதி ஆசிரமத்திலிருந்து தனது புகழ்பெற்ற தண்டி யாத்திரையைத் தொடங்கினார்.

2. **மாணவர்கள் குழுக்களாக பிரிக்கப்பட்டு காந்தியடிகள், ஜின்னா, B.R. அம்பேத்கர், புரட்சிகர தேசியவாத தலைவர்கள், பொதுவுடைமைவாத தலைவர்கள் ஆகியோரின் கருத்துகள் பற்றி விவாதம் நடத்துமாறு கேட்டுக்கொள்ளலாம்.**

மாணவர்கள் இச்செயல்பாட்டினைத் தாங்களாகவே செய்து பார்க்க வேண்டும்.

# கூடுதல் வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும். 1 மதிப்பெண்**

1. **காந்தியடிகள் பிறந்த மாநிலம் ________.**

அ) குஜராத் ஆ) உத்திரபிரதேசம்
இ) மஹாராஷ்டிரா ஈ) மத்தியப் பிரதேசம்

[விடை: அ) குஜராத்]

2. **காந்தியடிகள் சட்டம் பயில்வதற்காக 1888இல் ________ கடல் பயணம் மேற்கொண்டார்.**

அ) அமெரிக்கா ஆ) இங்கிலாந்து
இ) ஆஸ்திரேலியா ஈ) தென்ஆப்பிரிக்கா

[விடை: ஆ) இங்கிலாந்து]

3. **காந்தியடிகள் ________ இல் முதன் முறையாக இனவெறியை எதிர்கொண்டார்.**

அ) ஆஸ்திரேலியா ஆ) தென்ஆப்பிரிக்கா
இ) நியூசிலாந்து ஈ) ரஷ்யா

[விடை: ஆ) தென்ஆப்பிரிக்கா]

4. **________ உள்ள சம்பரானில் தீன் காதியா முறை பின்பற்றப்பட்டது.**

அ) பீகார் ஆ) மேற்கு வங்காளம்
இ) புதுடெல்லி ஈ) பஞ்சாப்

[விடை: அ) பீகார்]

5. **அகமதாபாத் வேலைநிறுத்தம் நடைபெற்ற வருடம் ________.**

அ) 1928 ஆ) 1938
இ) 1918 ஈ) 1925

[விடை: இ) 1918]

6. **ரௌலட் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு ________ .**

அ) 1914 ஆ) 1918
இ) 1919 ஈ) 1927

[விடை: இ) 1919]

7. **________ சட்டம் கருப்புச் சட்டம் என்று காந்தியடிகளால் அழைக்கப்பட்டது.**

அ) ஜாலியன் வாலாபாக்
ஆ) ரௌலட்
இ) இந்திய அரசியல்
ஈ) கேபினெட் தூதுக்குழு

[விடை: ஆ) ரௌலட்]





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



(ii) சட்டமறுப்பு இயக்கத்தால் காங்கிரஸ் பெரிதும் பலன் பெற்றது. சட்டப்பேரவை புறக்கணிப்பைக் கைவிட்ட காங்கிரஸ் தேர்தல்களில் போட்டியிட்டது.

(iii) பதினோரு மாகாணங்களில் போட்டியிட்டு ஏழு மாகாணங்களில் காங்கிரஸ் வெற்றிபெற்றது. மதராஸ், பம்பாய், மத்திய மாகாணங்கள் ஒடிசா, பீகார், ஐக்கிய மாகாணங்கள், வடமேற்கு எல்லை மாகாணம், சர் முஹம்மது சாதுல்லா தலைமையிலான அசாம் பள்ளத்தாக்கு முஸ்லிம் கட்சியுடன் இணைந்து கூட்டணி அரசு உட்பட எட்டு மாகாணங்களில் அது ஆட்சி அமைத்தது.

(iv) காங்கிரஸ் அரசுகள் பிரபலமான அரசுகளாக செயல்பட்டன. மக்களின் தேவைகளை அவை நிறைவேற்றின. அமைச்சர்களின் ஊதியம் மாதம் ஒன்றுக்கு 2 ஆயிரம் ரூபாயிலிருந்து 500 ரூபாயாக குறைக்கப்பட்டது.

(v) தேசியவாதிகளுக்கு எதிராக எடுக்கப்பட்ட முந்தைய நடவடிக்கைகள் ரத்து செய்யப்பட்டன. கம்யூனிஸ்ட் கட்சி தவிர இதர கட்சிகள் மீது விதிக்கப்பட்ட தடைகளை ரத்து செய்தனர். காவல்துறை அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பட்டன.

(vi) விவசாயிகளின் கடன்கள் குறையவும் தொழிலக தொழிலாளர்களின் பணி நிலைமை மேம்படவும் சட்டபூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

☆ ☆ ☆

## அலகுத் தேர்வு

**நேரம் : 60 நிமிடங்கள்** **மதிப்பெண்கள் : 25**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (3 × 1 = 3)

1. விடுதலை நாளாக கீழ்க்கண்டவற்றில் எந்த நாள் அறிவிக்கப்பட்டது?
   அ) 1930 ஜனவரி 26
   ஆ) 1929 டிசம்பர் 26
   இ) 1946 ஜூன் 16
   ஈ) 1947 ஜனவரி 15

2. முதன் முதலாக வனங்கள் சட்டம் எந்த ஆண்டில் இயற்றப்பட்டது?
   அ) 1958 ஆ) 1911
   இ) 1865 ஈ) 1936

3. 1933 ஜனவரி 8 எந்த நாளாக அனுசரிக்கப் பட்டது?
   அ) கோவில் நுழைவு நாள்
   ஆ) மீட்பு நாள் (டெலிவரன்ஸ் டே)
   இ) நேரடி நடவடிக்கை நாள்
   ஈ) சுதந்திரப் பெருநாள்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** (3 × 1 = 3)

4. காந்தியடிகளின் அரசியல் குரு ______ ஆவார்.
5. 1919ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டம் மாகாணங்களில் ______ அறிமுகம் செய்தது.
6. வடமேற்கு எல்லை மாகாணங்களில் சட்டமறுப்பு இயக்கத்தை தலைமையேற்று நடத்தியவர் ______

**III. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.** (2 × 1 = 2)

7. i) இந்திய பொதுவுடமை கட்சி 1920ஆம் ஆண்டு தாஷ்கண்டில் தொடங்கப்பட்டது.
   ii) எம்.சிங்காரவேலர் கான்பூர் சதித்திட்ட வழக்கில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.
   iii) ஜெயப்பிரகாஷ் நாராயண் ஆச்சார்ய நரேந்திரதேவ் மினுமசானி ஆகியோர் தலைமையில் காங்கிரஸ் சமதர்ம கட்சி உருவானது.
   iv) வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் சமதர்மவாதிகள் பங்கேற்கவில்லை.
   அ) (i), (ii) ஆகியன சரி
   ஆ) (ii) மற்றும் (iii) சரியானது
   இ) (iv) சரியானது
   ஈ) (i), (iii) & (iv) ஆகியன சரி





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

வரலாறு

# அலகு 9 தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்டம்



## கற்றலின் நோக்கங்கள்

**கீழ்க்காண்பனவற்றோடு அறிமுகமாதல்:**

- தமிழ்நாட்டில் காலனிய எதிர்ப்புப் போராட்டங்கள்.
- கல்வியின் வளர்ச்சிக்கும் ஒடுக்கப்பட்ட மக்களின் மேம்பாட்டிற்கும் கிறித்துவ சமயப்பரப்பு நிறுவனங்களின் பங்களிப்பு.
- தமிழ்நாட்டில் காங்கிரசின் அரசியலுக்கு நீதிக்கட்சியின் சவால்.
- தமிழ்நாட்டில் காங்கிரசின் போர்க்குணமிக்க வெகு மக்கள் இயக்கங்கள்.

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

**1. சென்னை மகாஜன சபையின் முதல் தலைவர் யார்?**

அ) T.M. நாயர் ஆ) P. ரங்கைய நாயுடு
இ) G. சுப்பிரமணியம் ஈ) G.A. நடேசன் **[விடை : ஆ) P. ரங்கைய நாயுடு]**

**2. இந்திய தேசியக் காங்கிரசின் மூன்றாவது மாநாடு / அமர்வு எங்கே நடைபெற்றது?**

அ) மெரினா ஆ) மைலாப்பூர்
இ) புனிதஜார்ஜ் கோட்டை ஈ) ஆயிரம் விளக்கு **[விடை : ஈ) ஆயிரம் விளக்கு]**

**3. "அதிநவீன வசதிகளுடன் கூடிய ரயிலில் அடிமைகளாக இருப்பதைவிட சுதந்திரத்துடன் கூடிய மாட்டு வண்டியே சிறந்தது" எனக் கூறியவர் யார்?**

அ) அன்னி பெசன்ட் ஆ) M. வீரராகவாச்சாரி
இ) B.P. வாடியா ஈ) G.S. அருண்டேல் **[விடை : அ) அன்னி பெசன்ட்]**

**4. கீழ்க்காண்பனவற்றில் தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தின் அதிகாரபூர்வமான ஆங்கிலச் செய்தித்தாள் எது?**

அ) திராவிடன் ஆ) ஆந்திரப் பிரகாசிகா
இ) ஜஸ்டிஸ் ஈ) நியூ இண்டியா **[விடை : இ) ஜஸ்டிஸ்]**

**5. கீழ்க்காண்பவர்களுள் சுயராஜியவாதி யார்?**

அ) S.சத்தியமூர்த்தி ஆ) கஸ்தூரிரங்கர்
இ) P. சுப்பராயன் ஈ) பெரியார் ஈ.வெ.ரா **[விடை : அ) S.சத்தியமூர்த்தி]**



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

(v) பிராமணரல்லாதோர்களின் நலன்களை மேம்படுத்துவதற்காகத் தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் (South Indian Liberal Federataion - SILF) எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது.

(vi) ஆங்கிலத்தில் ஜஸ்டிஸ் (Justice – நீதி) தமிழில் திராவிடன், தெலுங்கில் ஆந்திர பிரகாசிகா எனும் மூன்று செய்தித்தாள்களையும் தொடங்கினர்.

(vii) இவ்வமைப்பு நடத்திய ஆங்கில நாளிதழின் பெயரான ஜஸ்டிஸ் என்பதே அவ்வமைப்பின் பெயராகி ஜஸ்டிஸ் கட்சி (நீதிக்கட்சி) என அழைக்கப்படலாயிற்று.

**இடஒதுக்கீட்டுக்கான கோரிக்கை**

(i) நீதிக்கட்சி தனது நோக்கங்களை கோடிட்டு காட்டி பிராமணரல்லாதோரின் அறிக்கையை (Non - Brahmin Manifests) வெளியிட்டது. அவை: அரசுப் பணியிடங்களில் பிராமணரல்லாதோர்களுக்கு இடஒதுக்கீடு மற்றும் பிரதிநித்துவ அமைப்புகளில் இடஒதுக்கீடு என்பனவாகும்.

(ii) பாராளுமன்ற அரசியல் சீர்திருத்தங்கள் குறித்து 1917இல் மாண்டேகுவின் அறிவிப்பைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் அரசியல் விவாதங்கள் தீவிரமடைந்தன. சென்னை அரசாங்கம் நீதிக்கட்சியை ஆதரித்தது.

(iii) 1919ஆம் ஆண்டுச் சட்டம் பிராமணரல்லா தோர்களுக்குத் தேர்தலில் இடஒதுக்கீடு வழங்கியது. இந்நடவடிக்கையைக் காங்கிரஸ் கட்சி விமர்சனம் செய்தது. ஆனால் நீதிக்கட்சியால் இது வரவேற்கப்பட்டது.

**3. சட்ட மறுப்பு இயக்கத்தில் தமிழ்நாடு வகித்த பாத்திரத்தை விவரி.**

(i) காந்தியடிகள் முன் வைத்த கோரிக்கைகளை வைஸ்ராய் ஏற்றுக் கொள்ளாததைத் தொடர்ந்து அவர் சட்டமறுப்பு இயக்கத்தைத் தொடங்கினார். 1930 மார்ச் 12இல் தண்டியை நோக்கி உப்புச் சத்தியாகிரக யாத்திரையை துவக்கினார்.

(ii) சட்டமறுப்பு இயக்கமானது மாணவர்கள், கடைகள் வைத்திருப்போர், தொழிலாளர், பெண்கள் ஆகியோரின் பங்கேற்புடன் மக்கள் பெருவாரியான எண்ணிக்கையில் கலந்து கொண்ட போராட்டமாகும்.

(iii) கிராமப்புறங்களிலும் நகரங்களிலும் பொதுக் கூட்டங்கள் ஊர்வலங்கள், கடையடைப்பு ஆகியனவும், சுதேசி நாடகங்களை மேடையேற்றுவது, சுதேசிப் பாடல்கள் பாடுவது ஆகியனவும் அன்றாடம் நிகழ்வுகள் ஆயின.

(iv) சென்னை நகரில் கடைகளுக்கு முன்பாக மறியல்கள் நடத்தப்பட்டதுடன் அந்நியப் பண்டங்கள் புறக்கணிக்கப்பட்டன. ராஜாஜி உப்புச் சத்தியாகிரகம் ஒன்றினை ஏற்பாடு செய்து தலைமையேற்று வேதாரண்யம் நோக்கி அணிவகுத்துச் சென்றார்.

(v) 1930 ஏப்ரல் 13இல் திருச்சிராப்பள்ளியிலிருந்து தொடங்கி ஏப்ரல் 28இல் தஞ்சாவூர் மாவட்டத்தின் வேதாரண்யத்தைச் சென்றடைந்தது. இவ்வணிவகுப்புக்கென்றே "கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது, சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்" எனும் சிறப்புப் பாடலை நாமக்கல் கவிஞர் ராமலிங்கனார் புனைந்திருந்தார்.

(vi) காவல் துறையின் கொடூரமான நடவடிக்கைகளைப் பொருட்படுத்தாமல் அணிவகுத்துச் சென்ற சத்தியாகிரகிகளுக்கு பயணித்த பாதையெங்கும் எழுச்சிமிகு வரவேற்பு அளிக்கப்பட்டது.

(vii) வேதாரண்யம் சென்றடைந்த பின்னர் ராஜாஜியின் தலைமையில் 12 தொண்டர்கள் உப்புச்சட்டத்தை மீறி உப்பை அள்ளினார். உப்புச் சட்டங்களை மீறியதற்காக ராஜாஜி கைது செய்யப்பட்டார்.

(viii) T.S.S.ராஜன், திருமதி.ருக்மணி லட்சுமிபதி, சர்தார் வேதரத்தினம், C.சாமிநாதர் மற்றும் K.சந்தானம் ஆகியோர் வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகத்தில் பங்கேற்ற ஏனைய முக்கியத் தலைவர்களாவர்.

## கூடுதல் வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும். 1 மதிப்பெண்**

**1. 1878இல் ____________ என்னும் செய்திப் பத்திரிக்கைத் தொடங்கப்பட்டது.**

அ) தி இந்து
ஆ) இண்டியன் எக்ஸ்பிரஸ்
இ) டெக்கான் க்ரானிக்கல்
ஈ) தி டைம்ஸ் ஆஃப் இந்தியா

[விடை: அ) தி இந்து]



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



(iii) தனது நீண்ட பொது வாழ்வின் போது, அவர் கேளராவில் வைக்கம் சத்தியாகிரகத்தை வழிநடத்தினார். ஏனெனில் இது இந்தியாவின் அனைத்து குடிமக்களுக்கும் சமூக உரிமைகள் தொடர்பான பிரச்சனையாக அவர் கருதினார்.

(iv) தமிழ்நாட்டில் குற்றப்பரம்பரைச் சமூகங்களின் பாதுகாவலராக விளங்கினார். பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு இவர் ஆற்றிய சேவையின் காரணமாக மதுரை மக்கள் இவரை 'ரோசாப்பூ துரை' என அன்புடன் அழைத்தனர்.

(v) மதுரை தொழிலாளர் சங்கம் (Madurai Labour Union 1918) எனும் அமைப்பை ஏற்படுத்துவதற்கு ஹார்வி மில் தொழிலாளர்களுக்கு உதவினார்.

(vi) இச்சங்கத்தின் தொடக்ககாலப் போராட்டங்கள், நூற்பாலைத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வையும் வேலை நேரக் குறைப்பையும் பெற்றுத்தந்தன.

**2. ரௌலட் சத்தியகிரகம் பற்றி விரிவாக விவரி.**

(i) 1919 மார்ச் 18இல் மெரினா கடற்கரையில் நடைபெற்ற கூட்டத்தில் காந்தியடிகள் உரையாற்றினார்.

(ii) 1919 ஏப்ரல் 6இல் 'கறுப்புச் சட்டத்தை' எதிர்க்கும் நோக்கில் கடையடைப்பும் வேலை நிறுத்தங்களும் நடத்தப்பட்டன.

(iii) தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. சென்னை நகரின் பல பகுதிகளிலிருந்து தொடங்கிய ஊர்வலங்கள் மெரினா கடற்கரையில் ஒன்றினைந்து பெரும் மக்கள் கூட்டமானது.

(iv) அந்நாள் முழுவதும் உண்ணாவிரதமும் பிரார்த்தனைகளும் மேற்கொள்ளப்பட்டன. சென்னை சத்யாகிரக சபை என்ற அமைப்பும் நிறுவப்பட்டது.

(v) ராஜாஜி, கஸ்தூரிரங்கர், S.சத்தியமூர்த்தி, ஜார்ஜ் ஜோசப் ஆகியோர் கூட்டத்தில் உரை நிகழ்த்தினர். தொழிலாளர்களுக்கென தனியாக நடத்தப்பட்ட கூட்டமொன்றில் V.கல்யாணசுந்தரம் (திரு.வி.க) B.P.வாடியா, வ.உ.சி. ஆகியோர் உரையாற்றினர்.

(vi) தொழிலாளர்களும், மாணவர்களும், பெண்களும் பெருவாரியான எண்ணிக்கையில் பங்கேற்றதே இவ்வியக்கத்தின் முக்கிய அம்சமாகும்.

☆ ☆ ☆

## அலகுத் தேர்வு

**நேரம் : 60 நிமிடங்கள்** **மதிப்பெண்கள் : 25**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (3 × 1 = 3)

1. கீழ்க்காண்பவர்களுள் சுயராஜியவாதி யார்?
அ) S.சத்தியமூர்த்தி ஆ) கஸ்தூரிரங்கர்
இ) P.சுப்பராயன் ஈ) பெரியார் ஈ.வெ.ரா.

2. சென்னைக்கருகேயுள்ள உதயவனத்தில் சத்யாகிரக முகாமை அமைத்தவர் யார்?
அ) K.காமராஜ் ஆ) C.ராஜாஜி
இ) K.சந்தானம் ஈ) T.பிரகாசம்

3. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின்போது ராணுவத்துடனான காங்கிரஸ் தொண்டர்களின் மோதல் நடைபெற்ற இடம் எது?
அ) ஈரோடு ஆ) சென்னை
இ) சேலம் ஈ) மதுரை

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** (3 × 1 = 3)

4. தனது எழுத்துக்களின் வாயிலாக ஆங்கிலேயரின் பொருளாதாரச் சுரண்டலை ______ அம்பலப்படுத்தினார்.

5. சென்னையில் தொழிற்சங்கங்களைத் தொடங்குவதில் முன்னோடியாகத் திகழ்ந்தவர் ______ ஆவார்.

6. சென்னையில் முதலாவது காங்கிரஸ் அமைச்சரவையை அமைத்தவர் ______.





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

வரலாறு

# அலகு 10 தமிழ்நாட்டில் சமூக மாற்றங்கள்



## கற்றலின் நோக்கங்கள்

**கீழ்க்காண்பனவற்றோடு அறிமுகமாதல்:**

- நவீனத் தமிழ்நாட்டின் சமூக மாற்றங்கள் குறித்த அறிவினைப் பெறுதல்.
- தமிழ்நாட்டின் பல்வேறு சமூகச் சீர்திருத்த இயக்கங்களை அறிதல்.
- சமூக சீர்திருத்தவாதிகளின் கருத்துக்களைப் புரிந்து கொள்ளல்.

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

**1. இந்தியாவைச் சேர்ந்த சமூக சீர்திருத்தவாதிகளின் முன்னோடி _________ ஆவார்.**

அ) சி.வை. தாமோதரன் ஆ) பெரியார்
இ) ராஜா ராம்மோகன்ராய் ஈ) மறைமலையடிகள் [விடை : இ) ராஜா ராம்மோகன்ராய்]

**2. 1709 இல் தரங்கம்பாடியில் _________ ஒரு முழுமையான அச்சகத்தை நிறுவினார்**

அ) கால்டுவெல் ஆ) எப்.டபிள்யு. எல்லிஸ்
இ) சீகன்பால்கு ஈ) மீனாட்சி சுந்தரம் [விடை : இ) சீகன்பால்கு]

**3. _________ சுயமரியாதை இயக்கத்தின் அதிகாரபூர்வச் செய்தித்தாள்.**

அ) குடியரசு ஆ) புரட்சி
இ) விடுதலை ஈ) பகுத்தறிவு [விடை : அ) குடியரசு]

**4. சமயம் அகற்றப்பட்டு அவ்விடத்தில் _________ வைக்கப்பட வேண்டுமென பெரியார் விரும்பினார்.**

அ) தேசியவாதம் ஆ) உருவ வழிபாடு மறுப்பு
இ) பகுத்தறிவுவாதம் ஈ) ஆன்மீகம் [விடை : இ) பகுத்தறிவுவாதம்]

**5. 1893 இல் ஆதி திராவிட மகாஜன சபையை _________ நிறுவினார்.**

அ) இரட்டைமலை சீனிவாசன் ஆ) B.R.அம்பேத்கார்
இ) ராஜாஜி ஈ) எம்.சி. ராஜா [விடை : அ) இரட்டைமலை சீனிவாசன்]

**6. இந்தியாவின் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட தொழிற்சங்கம் _________ இல் உருவாக்கப்பட்டது.**

அ) 1918 ஆ) 1917 இ) 1916 ஈ) 1914 [விடை : அ) 1918]



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



(ii) சி.வை.தாமோதரனார் பனை ஓலைகளில் கையால் எழுதப் பெற்றிருந்த பல தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களைப் பதிப்பித்தார். அவர் பதிப்பித்த நூல்களில் தொல்காப்பியம், வீரசோழியம், இறையனார் அகப்பொருள், இலக்கண விளக்கம், கலித்தொகை மற்றும் சூளாமணி ஆகியவை அடங்கும்.

(iii) தமிழறிஞர் மீனாட்சி சுந்தரனாரின் மாணவரான உ.வே.சாமிநாதர் செவ்வியல் தமிழ் இலக்கிய நூல்களான சீவகசிந்தாமணி (1887), பத்துப்பாட்டு (1889), சிலப்பதிகாரம் (1892), புறநானூறு (1894), புறப்பொருள் வெண்பா மாலை (1895), மணிமேகலை (1898), ஐங்குறுநூறு (1903), பதிற்றுப்பத்து (1904) ஆகியவற்றை வெளியிடும் முயற்சிகளை மேற்கொண்டார்.

(iv) பண்டைய செவ்வியல் இலக்கியங்கள் மீண்டும் கண்டறியப்பட்டதையும் அவை வெளியிடப்பட்டதையும் தமிழ் மறுமலர்ச்சியின் அடித்தளமாகக் கருதலாம்.

(v) இவ்வாறு பழம்பெரும் நூல்கள் வெளியிடப்பட்டது, தமிழ் மக்களிடையே தங்கள் வரலாற்று மரபு, மொழி, இலக்கியம் மற்றும் சமயம் ஆகியவை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

(vi) ராபர்ட் கால்டுவெல் (1814 – 1891) திராவிட அல்லது தென்னிந்திய மொழிகளின் ஒப்பீட்டு இலக்கணம் எனத் தலைப்பிடப்பட்ட நூலில் இக்கோட்பாட்டை 1856இல் விரிவுபடுத்தினார்.

(vii) திராவிட மொழிகளுக்கிடையில் நெருக்கமான ஒப்புமை இருப்பதையும் அப்படியான ஒப்புமை சமஸ்கிருதத்துடன் இல்லை என்பதையும் நிறுவினார். மேலும் தமிழின் தொன்மையையும் நிலைநாட்டினார்.

(viii) இக்காலகட்டத்தைச் சேர்ந்த அறிவார்ந்த தமிழர்கள் தமிழ்மொழியே திராவிடர்களின் மொழியென்றும் தமிழர்கள் பிராமணர்கள் அல்ல என்றும் அவர்களின் சமூகவாழ்வில் சாதிகளில்லை, பாலின வேறுபாடில்லை, சமத்துவம் நிலவியது எனவும் வாதிட்டனர்.

(ix) தமிழ்நாட்டில் திராவிட உணர்வு தோன்றி வளர்வதற்கு தமிழ் மறுமலர்ச்சி பங்களிப்பைச் செய்தது. இச்சிந்தனைகள் பி.சுந்தரனாரால் எழுதப்பெற்ற மனோன்மணியம் எனும் நாடக நூலில் இடம் பெற்றுள்ள தமிழ்மொழி வாழ்த்துப் பாடலில் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

(x) சி.வை.தாமோதரனார், உ.வே. சாமிநாதர், திரு.வி.கல்யாண சுந்தரம் (1883 – 1953) பரிதிமாற்கலைஞர்(1870 – 1903), மறைமலையடிகள் (1876 – 1950), சுப்பிரமணிய பாரதி (1882 – 1921), ச.வையாபுரி (1891 – 1956), கவிஞர் பாரதிதாசன் (1891 – 1964) ஆகியோர் தங்களுக்கே உரித்தான வழிகளில், தங்களின் எழுத்துக்கள் மூலம் தமிழ் இலக்கியத்தின் புத்தெழுச்சிக்குப் பங்களிப்புச் செய்தனர்.

(xi) தொடக்க கால தமிழ் அறிஞர்களில் ஒருவரான வி.கோ.சூரிய நாராயண சாஸ்திரி தனக்கே பரிதிமாற் கலைஞர் என தூய தமிழ்ப் பெயரைச் சூட்டிக் கொண்டார். தமிழ்மொழி ஒரு செம்மொழி என்றும், சென்னைப் பல்கலைக் கழகம் தமிழை ஒரு வட்டார மொழியென அழைக்கக் கூடாதென முதன்முதலாக வாதாடியவர் அவரே. 14 வரிச் செய்யுள் வடிவத்தை தமிழுக்கு அறிமுகம் செய்தவர்.

(xii) தூய தமிழ் வார்த்தைகளைப் பயன்படுத்துவதையும் சமஸ்கிருதத்தின் செல்வாக்கு தமிழ்மொழியிலிருந்து அகற்றப்படுவதையும் மறைமலை அடிகள் ஊக்குவித்தார்.

**2. நீதிக்கட்சியின் தோற்றத்திற்கான பின்புலத்தை விளக்கி சமூக நீதிக்கான அதன் பங்களிப்பைச் சுட்டிக் காட்டவும்.**

**தென்னிந்திய நல உரிமைச் சங்கம்**

(i) முதல் உலகப்போர் நடந்து கொண்டிருந்த நிலையில் ஆங்கில அரசாங்கம் போருக்குப் பின்னர் இந்தியாவில் பிரதிநிதித்துவ அமைப்புகளை அறிமுகம் செய்வது குறித்து பரிசீலனை செய்து கொண்டிருந்தது.

(ii) அப்படிப்பட்ட அரசியல் சீர்திருத்தங்கள் பிராமணர்களின் அரசியல் அதிகாரத்தை மேலும் வலுவடையச் செய்யும் என அஞ்சிய கல்வி கற்ற பிராமணர் அல்லாதவர்கள் தங்களை அரசியல் ரீதியாக அணிதிரட்டிக் கொள்ள முடிவு செய்தனர்.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



# கூடுதல் வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும். 1 மதிப்பெண்**

**1. 1578இல் ____________ எனும் தமிழ் புத்தகம் கோவாவில் வெளியிடப்பட்டது.**

அ) தொல்காப்பியம்
ஆ) தம்பிரான் வணக்கம்
இ) திருக்குறள் ஈ) சூளாமணி

[விடை: ஆ) தம்பிரான் வணக்கம்]

**2. மனோன்மணியம் என்னும் நாடக நூலை இயற்றியர் ____________ .**

அ) C.W.தாமோதரனார்
ஆ) திரு.கல்யாண சுந்தரம்
இ) பி.சுந்தரனார் ஈ) பாரதிதாசன்

[விடை: இ) பி.சுந்தரனார்]

**3. தமிழ்மொழி ஒரு செம்மொழி என்றும் எனவே சென்னைப் பல்கலைக் கழகம் தமிழை ஒரு வட்டார மொழியென அழைக்கக் கூடாதென முதன்முதலாக வாதாடியவர் ____________ .**

அ) பாரதிதாசன்
ஆ) பரிதிமாற் கலைஞர்
இ) சுப்பிரமணிய பாரதி
ஈ) திரு.வி.க. [விடை: ஆ) பரிதிமாற் கலைஞர்]

**4. மறைமலை அடிகளாரின் ஞானசேகரம் எனும் பத்திரிக்கை ____________ எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.**

அ) பட்டினப்பாலை ஆ) முல்லைப்பாட்டு
இ) அறிவுக் கடல் ஈ) சித்தாந்தா தீபிகா

[விடை: இ) அறிவுக் கடல்]

**5. பிராமணர் அல்லாதவர்களை பாதுகாக்கும் இயக்கம் உருவான ஆண்டு __________ .**

அ) 1909 ஆ) 1910
இ) 1912 ஈ) 1916

[விடை: அ) 1909]

**6. சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர் ____________ ஆவார்.**

அ) T.M.நாயர் ஆ) C.நடேசனார்
இ) A.சுப்ராயலு ஈ) ஈ.வெ.ராமசாமி

[விடை: ஈ) ஈ.வெ.ராமசாமி]

**7. 1912இல் __________ எனும் மருத்துவர் மதராஸ் ஐக்கிய கழகம் எனும் அமைப்பை உருவாக்கினார்.**

அ) சி.நடேசனார் ஆ) ஈ.வெ.பெரியார்
இ) சுந்தரனார்
ஈ) சோமசுந்தர நாயக்கர்

[விடை: அ) சி.நடேசனார்]

**8. ________ தமிழ் மொழியியல் தூய்மைவாதத்தின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்.**

அ) சி.நடேசனார்
ஆ) சி.வி.தாமோதரனார்
இ) மறைமலை அடிகள்
ஈ) உ.வே.சாமிநாதர்

[விடை: இ) மறைமலை அடிகள்]

**9. பட்டினப்பாலை, முல்லைப்பாட்டு ஆகியவற்றிற்கு விளக்கவுரை எழுதியவர் ____________ .**

அ) மறைமலை அடிகள்
ஆ) சி.நடேசனார்
இ) வ.உ.சி.
ஈ) சி.வை.தாமோதரனார்

[விடை: அ) மறைமலை அடிகள்]

**10. நடேசனார் சென்னையில் ____________ ல் 1916இல் திராவிடர் இல்லம் என்று ஓர் தங்கும் விடுதியை நிறுவினார்.**

அ) வடபழனி ஆ) திருவல்லிக்கேணி
இ) தி.நகர் ஈ) ராயப்பேட்டை

[விடை: ஆ) திருவல்லிக்கேணி]

**11. பிராமணரல்லாதோர் அறிக்கை வெளியிடப்பட்ட ஆண்டு ____________ .**

அ) 1914 ஆ) 1918
இ) 1916 ஈ) 1915

[விடை: இ) 1916]

**12. வைக்கம் வீரர் என்று அழைக்கப்படுகிறவர் ___.**

அ) பெரியார் ஆ) ராஜாஜி
இ) அறிஞர் அண்ணா
ஈ) ராஜேந்திர பிரசாத் [விடை: அ) பெரியார்]

**13. பெரியார் சுயமரியாதை இயக்கத்தை தொடங்கிய வருடம் ____________ .**

அ) 1930 ஆ) 1925
இ) 1922 ஈ) 1935

[விடை: ஆ) 1925]

**14. பெரியார் குலக் கல்வி திட்டத்திற்கு எதிரான போராட்டங்கள் _________யின் பதவி விலகலுக்கு காரணமாய் அமைந்தது.**

அ) ராஜாஜி ஆ) வ.உ.சிதம்பரம்
இ) மறைமலை அடிகள்
ஈ) நடேசனார் [விடை: அ) ராஜாஜி]

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக**

**1.** குறிப்பிட்ட வரலாற்று வளர்ச்சி நிகழ்வு ................. என அடையாளப்படுத்தப்பட்டது.

[விடை : இந்திய மறுமலர்ச்சி]

தமிழ்நாட்டில் சமூக மாற்றங்கள்

வரலாறு



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



(iii) பகுத்தறிவும் சுயமரியாதையும் அனைத்து மனிதர்களின் பிறப்புரிமை என பிரகடனம் செய்த இவ்வியக்கம் சுயாட்சியைக் காட்டிலும் இவை முக்கியமானவை எனும் கருத்தை உயர்த்திப் பிடித்தது.

(iv) பெண்களின் தாழ்வான நிலைக்கு எழுத்தறிவின்மையே காரணம் என அறிவித்த அவ்வியக்கம் அனைவருக்கும் கட்டாயத் தொடக்கக் கல்வியை வழங்கும் பணிகளை மேற்கொண்டது.

(v) இவ்வியக்கம் பெண் விடுதலை கோருதல், மூடநம்பிக்கைகளை நீக்குதல் மற்றும் பகுத்தறிவை வலியுறுத்துதல் போன்ற கோரிக்கைகளை கோரியது. மேலும் இவ்வியக்கம் சீர்திருத்தத் திருமணம் அல்லது சுயமரியாதைத் திருமணங்களை ஆதரித்தது.

(vi) சுயமரியாதை இயக்கம் பிராமணர் அல்லாத இந்துக்களின் நலன்களுக்காக மட்டுமல்லாமல் இஸ்லாமியர்களின் நலனுக்காகவும் போராடியது.

(vii) இந்து சமூகத்தின் ஒதுக்கப்பட்ட பிரிவுகளை சேர்ந்த மக்களை இஸ்லாத்தில் சேர்த்துக் கொள்ளும்படியும், அதன் மூலம் அவர்கள் இஸ்லாமின் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் அனுபவிப்பர் என முஸ்லிம்களிடம் பரிந்துரை செய்தது.

(viii) முஸ்லிம் பெண்கள் பர்தா அணிவது போன்ற சில பழக்கங்களை பெரியார் விமர்சனம் செய்ய தயங்கவில்லை.

(ix) இஸ்லாம் சமூகத்தில் சீர்திருத்த முன்முயற்சிகள் மேற்கொண்ட துருக்கியைச் சேர்ந்த முஸ்தபா கமால் பாட்சா ஆப்கானிஸ்தானத்தைச் சேர்ந்த அமானுல்லா ஆகியோரை திராவிட முஸ்லிம்கள் பின்பற்ற வேண்டுமென பெரியார் கூறினார்.

2. **இந்திய விடுதலைக்கு முன்பிருந்த மொழி போராட்டம் பற்றி விரிவாக கூறவும்.**

(i) பொதுவாக, மொழி என்பது அடையாளத்தின் வலிமையான குறியீடாகும். மேலும் இது ஒரு சமூகத்தின் பண்பாடு மற்றும் உணர்வுகளுடன் இயைந்து நிற்பது.

(ii) தமிழ்மொழி பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தனது மேன்மையை மீட்டுப் பெற்றது.

(iii) மறைமலை அடிகளின் தனித்தமிழ் இயக்கம், பெரியாரின் மொழிச் சீர்திருத்தம் மற்றும் தமிழிசை இயக்கம் ஆகியவை தமிழுக்கு வலுச்சேர்த்தன.

(iv) திராவிட உணர்வுக்கு இட்டுச்சென்ற தமிழ் மறுமலர்ச்சி நவீனத் தமிழ்மொழியின் வளர்ச்சியிலும் அதன் கலை வடிவங்களுடைய வளர்ச்சியிலும் பெரும் பங்களிப்பைச் செய்தது.

(v) ஆகம கோவில்களில் செய்யப்படும் சடங்குகள் தமிழில் செய்யப்படுவதில்லை. இசை நிகழ்ச்சிகளிலும் தமிழ் பாடல்கள் ஓரளவிலான இடத்தையே பெற்றிருந்தன.

(vi) ஆபிரகாம் பண்டிதர் தமிழ் இசை வரலாற்றை முறையாகக் கற்றாய்ந்து, பழந்தமிழர் இசை முறையை மீட்டுருவாக்கம் செய்ய முயன்றார்.

(vii) 1912இல் தஞ்சாவூர் “சங்கீத வித்யா மகாஜன சங்கம்” என்ற அமைப்பை ஏற்படுத்தினார். அதுவே தமிழிசை இயக்கத்தின் கருமூலமானது.

(viii) தமிழிசையின் நிலை குறித்து விவாதிக்க 1943இல் முதல் தமிழிசை மாநாடு நடத்தப்பட்டது.

(ix) தமிழ்நாட்டில் வெவ்வேறு காலப்பகுதிகளில் இந்தி கட்டாயமொழியாக நடைமுறைப்படுத்தப்பட்டது. தமிழ்மொழிக்கும் பண்பாட்டிற்குமான அச்சுறுத்தலாகவே கருதப்பட்டது. சென்னை மாகாணத்தின் முதலமைச்சராக இருந்த ராஜாஜி இந்தி மொழியைப் பள்ளிகளில் கட்டாயப் பாடமாக அறிமுகம் செய்தார். இது சென்னை மாகாணத்தில் கடுமையான எதிர்ப்பை உருவாக்கியது.

(x) இந்திமொழி அறிமுகம் செய்யப்பட்டால் தமிழ்மொழி பாதிப்புக்குள்ளாகும் என மறைமலை அடிகள் சுட்டிக்காட்டினார். தங்கள் போராட்டத்தை பிராமணியத்திற்கும், தமிழின் மீதான சமஸ்கிருதத்தின் ஆதிக்கத்திற்கும் எதிரான கருத்தியல் போராகவே கருதினர்.

(xi) போராட்டத்தின் போது பெருவாரியான மக்கள் கலந்து கொண்ட பொதுக் கூட்டங்களும், பேரணிகளும் உண்ணாவிரதங்களும் அரங்கேறின. பல்லாயிரக்கணக்கான மக்கள் இப்போராட்டத்தில் பங்கேற்றனர்.

☆☆☆





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

புவியியல்

# அலகு 6 தமிழ்நாடு – இயற்கைப் பிரிவுகள்



## கற்றலின் நோக்கங்கள்

- நமது மாநிலத்தின் உருவாக்கம் பற்றிய வரலாற்றைத் தெரிந்து கொள்ளல்.
- தமிழ்நாட்டின் இயற்கைப் பிரிவுகள் பற்றி கற்றறிதல்.
- தமிழ்நாட்டின் காலநிலை, மண் வகைகள் மற்றும் இயற்கை தாவரங்களின் தன்மைகளைப் புரிந்து கொள்ளல்.
- மாணவர்கள் தாங்கள் வசிக்கும் சுற்றுக்சூழல் மற்றும் புவியியல் கூறுகள் பற்றி அறிந்து கொள்ளல்.
- தமிழ்நாட்டில் நிகழும் பேரிடர்கள் மற்றும் அதன் தாக்கங்கள் குறித்து விழிப்புணர்வு பெறுதல்.

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. தமிழ்நாட்டின் அட்சப் பரவல் ___________ முதல் ___________ வரை உள்ளது.**

அ) 8°4′ வ முதல் 13° 35′ வ வரை    ஆ) 8° 5′ தெ முதல் 13° 35′ தெ வரை

இ) 8° 0′ வ முதல் 13° 05′ வ வரை    ஈ) 8° 0′ தெ முதல் 13° 05′ தெ வரை

**[விடை: அ) 8°4′ வ முதல் 13° 35′ வ வரை]**

**2. தமிழ்நாட்டின் தீர்க்க பரவல் ___________ முதல் ___________ வரை உள்ளது.**

அ) 76°18′ கி முதல் 80°20′ கி வரை    ஆ) 76°18′ மே முதல் 80°20′ மே வரை

இ) 10°20′ கி முதல் 86°18′ கி வரை    ஈ) 10°20′ மே முதல் 86°18′ மே வரை

**[விடை: அ) 76°18′ கி முதல் 80°20′ கி வரை]**

**3. தமிழ்நாட்டில் உள்ள மிக உயரமான சிகரம் ___________ ஆகும்.**

அ) ஆனைமுடி    ஆ) தொட்டபெட்டா

இ) மகேந்திரகிரி    ஈ) சேர்வராயன் **[விடை: ஆ) தொட்டபெட்டா]**

**4. கீழ்க்கண்டவற்றில் தமிழ்நாட்டின் மேற்கு தொடர்ச்சி மலையில் அமையாத கணவாய் எது?**

அ) பாலக்காடு    ஆ) செங்கோட்டை    இ) போர்காட்    ஈ) அச்சன்கோவில்


**[விடை: இ) போர்காட்]**



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores








orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



# கூடுதல் வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும். 1 மதிப்பெண்**

1. **திற்பரப்பு, காளிகேசம், உலக்கை மற்றும் வட்டப்பாறை நீர்வீழ்ச்சிகள் ........... மாவட்டத்தில் காணப்படுகின்றன.**

அ) கன்னியாகுமரி ஆ) மதுரை
இ) திருப்பூர் ஈ) நாமக்கல்

[விடை : அ) கன்னியாகுமரி]

2. **கும்பக்கரை மற்றும் சுருளி நீர்வீழ்ச்சிகள் அமைந்துள்ள மாவட்டம் .................**

அ) மதுரை ஆ) கோயம்புத்தூர்
இ) தேனி ஈ) திருநெல்வேலி

[விடை : இ) தேனி]

3. **குற்றாலம் மற்றும் கல்யாண தீர்த்தம் நீர்வீழ்ச்சிகள் அமைந்துள்ள மாவட்டம் .............**

அ) தேனி ஆ) ஈரோடு
இ) திருநெல்வேலி ஈ) கன்னியாகுமரி

[விடை : அ) திருநெல்வேலி]

4. **ஐயனார் நீர்வீழ்ச்சி உள்ள மாவட்டம் ................**

அ) மதுரை ஆ) விருதுநகர்
இ) சேலம் ஈ) ஈரோடு

[விடை : ஆ) விருதுநகர்]

5. **தருமபுரி மாவட்டத்தில் உள்ள நீர்வீழ்ச்சியின் பெயர் .................**

அ) ஒகேனக்கல் ஆ) ஆகாய கங்கை
இ) குற்றாலம் ஈ) சுருளி

[விடை : அ) ஒகேனக்கல்]

6. **ஆகாய கங்கை நீர்வீழ்ச்சி அமைந்துள்ள மாவட்டம் ................**

அ) தருமபுரி ஆ) திருநெல்வேலி
இ) நாமக்கல் ஈ) தேனி

[விடை : இ) நாமக்கல்]

7. **கேத்தரீன் மற்றும் பைக்கார நீர்வீழ்ச்சிகள் அமைந்துள்ள மாவட்டம் ................**

அ) விருதுநகர் ஆ) நீலகிரி
இ) மதுரை ஈ) திருப்பூர்

[விடை : ஆ) நீலகிரி]

8. **தமிழ்நாட்டில் ஒதுக்கப்பட்ட காடுகளின் பரப்பளவு ................. ச.கி.மீ.**

அ) 19,459 ஆ) 19,469
இ) 19,479 ஈ) 19,489

[விடை : அ) 19,459]

9. **பாதுகாக்கப்பட்ட காடுகளின் பரப்பளவு ................. ச.கி.மீ. ஆகும்.**

அ) 1,792 ஆ) 1,782
இ) 1,772 ஈ) 1,762

[விடை : ஆ) 1,782]

10. **................. காடுகளில் உள்ள மரங்கள் கோடை பருவங்களில் தங்களது இலைகளை உதிர்த்து விடுகின்றன.**

அ) வெப்பமண்டல இலையுதிர்க் காடுகள்
ஆ) மிதவெப்பமண்டல மலைக் காடுகள்
இ) வெப்பமண்டல பசுமை மாறாக் காடுகள்
ஈ) மாங்குரோவ் காடுகள்

[விடை : அ) வெப்பமண்டல இலையுதிர்க் காடுகள்]

11. **பிச்சாவரம் சதுப்பு நிலக்காடு ................ மாவட்டதில் சிதம்பரத்திற்கு அருகே அமைந்துள்ளது.**

அ) நாகப்பட்டினம் ஆ) கடலூர்
இ) தஞ்சாவூர் ஈ) இராமநாதபுரம்

[விடை : ஆ) கடலூர்]

12. **மாங்குரோவ் காடுகள் ................ பகுதிகளில் காணப்படுகின்றன.**

அ) முத்துப்பேட்டை ஆ) தர்மபுரி
இ) இராமநாதபுரம் ஈ) விருதுநகர்

[விடை : அ) முத்துப்பேட்டை]

13. **................ காடுகள் அதிக மழைபெறும் பகுதிகளில் காணப்படுகின்றன.**

அ) வெப்பமண்டல பசுமைமாறாக் காடுகள்
ஆ) மாங்குரோவ் காடுகள்
இ) மிதவெப்ப மண்டல மலைக்காடுகள்
ஈ) வெப்பமண்டல இலையுதிர்க் காடுகள்

[விடை : அ) வெப்பமண்டல பசுமைமாறாக் காடுகள்]

14. **தமிழ்நாட்டில் ................ சதவீத நிலப்பகுதி வறட்சிக்கு உள்ளாகும் பகுதிகளாக உள்ளன.**

அ) 64 ஆ) 36
இ) 40 ஈ) 50

[விடை : அ) 64]

15. **................ உலகின் 25 உயிரினப்பன்மை செறிந்த பகுதிகளில் ஒன்றாக உள்ளது.**

அ) மேற்கு தொடர்ச்சி மலை
ஆ) நீலகிரி
இ) கிழக்கு தொடர்ச்சி மலை
ஈ) தக்காண பீடபூமி

[விடை : அ) மேற்கு தொடர்ச்சி மலை]





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



**2. தமிழ்நாட்டில் உள்ள பறவைகள் சரணாலயம் பற்றி விவரிக்கவும்.**

| வ. எண் | பறவைகள் சரணாலயம் | மாவட்டம் | நிறுவப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 1 | வேட்டங்குடி பறவைகள் சரணாலயம் | சிவகங்கை | 1977 |
| 2 | பழவேற்காடு ஏரி பறவைகள் சரணாலயம் | திருவள்ளூர் | 1980 |
| 3 | கரிக்கிளி பறவைகள் சரணாலயம் | காஞ்சிபுரம் | 1989 |
| 4 | கஞ்சிரங்குளம் பறவைகள் சரணாலயம் | இராமநாதபுரம் | 1989 |
| 5 | சித்திரங்குடி பறவைகள் சரணாலயம் | இராமநாதபுரம் | 1989 |
| 6 | கூத்தன்குளம், கூடங்குளம் பறவைகள் சரணாலயம் | திருநெல்வேலி | 1994 |
| 7 | வெள்ளோடு பறவைகள் சரணாலயம் | ஈரோடு | 1997 |
| 8 | வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் | காஞ்சிபுரம் | 1998 |
| 9 | உதயமார்த்தாண்டபுரம் பறவைகள் சரணாலயம் | திருவாரூர் | 1998 |
| 10 | மேல செல்வனூர்-கீழ செல்வனூர் பறவைகள் சரணாலயம் | இராமநாதபுரம் | 1998 |
| 11 | வடுவூர் பறவைகள் சரணாலயம் | திருவாரூர் | 1999 |
| 12 | காரைவெட்டி பறவைகள் சரணாலயம் | அரியலூர் | 2000 |
| 13 | தீர்த்தங்கள் பறவைகள் சரணாலயம் | இராமநாதபுரம் | 2010 |
| 14 | சக்கர கோட்டை ஏரி பறவைகள் சரணாலயம் | இராமநாதபுரம் | 2012 |
| 15 | ஊசுடு ஏரி பறவைகள் சரணாலயம் | விழுப்புரம் | 2015 |

**3. வெள்ளப் பெருக்கிற்கு முன், வெள்ளப் பெருக்கின்போது மற்றும் வெள்ளப் பெருக்கிற்கு பின் நாம் செய்ய வேண்டியது என்ன?**

**வெள்ளப்பெருக்கிற்கு முன்:**

சேவை மையங்கள் மற்றும் வெளியேறும் வழிகளைத் தெரிந்து வைத்திருத்தல், அவசரகால தொலைபேசி எண்களையும், செய்திகளையும் தெரிந்து வைத்திருத்தல், முக்கிய பொருட்களை மடித்தும் சுருட்டியும் உயரமான பகுதிகளில் வைத்தல்.

**வெள்ளப்பெருக்கின் போது:**

குழந்தைகள் மற்றும் வயதானவர்களை வேகமாகவும், பாதுகாப்பாகவும், வீடுகளிலிருந்து உயரமான பகுதிகளுக்கு வெளியேற்றுவதை உறுதிசெய்தல், அனைத்து மின்சார சாதனங்கள் மற்றும் எரிவாயு சாதனங்களை அணைத்து வைத்தல், தாமதமின்றி வெளியேறுதல், நீரின் வழியாக வாகனங்களைச் செலுத்தாமலும், மின் கம்பிகள், மின் திறன் செலுத்தும் மின் வடக்கம்பிகள், மற்றும் வெள்ளங்களுக்கு தொலைவில் இருத்தல்.

**வெள்ளப்பெருக்கிற்குப் பின்:**

மீண்டும் வீடுகளுக்குச் செல்வதை உறுதி செய்தல், வீட்டிற்குள் நுழையும் முன் அனைத்து மின்சார உபகரணங்களையும் அணைத்து, மீண்டும் அவற்றை உபயோகப்படுத்தும் முன் சரியாக உள்ளனவா? என உறுதி செய்ய வேண்டும். பழுதுபட்ட பொருட்களை அப்புறப்படுத்துவதற்கு முன் அதற்கேற்ற உடையினை அணிவது அவசியம் ஆகும்.

**4. தமிழ்நாட்டில் உருவாகும் புயல்கள் மற்றும் புயல் மண்டலங்கள் பற்றி விவரிக்கவும்.**

(i) வடகிழக்கு பருவக்காற்று காலங்களில் வங்கக்கடலில் உருவாகும் வெப்பமண்டல சூறாவளிகள் தமிழக கடற்கரையைத் தாக்குகின்றன.

(ii) வெள்ளப்பெருக்கு, உயிர் சேதம் மற்றும் பொருட்சேதம் ஆகியவை மாநிலத்தில் தொடர்ச்சியாக நடைபெறும் நிகழ்வாகும்.

(iii) புயல் தாக்கும் தீவிரத்தின் அடிப்படையில் தமிழ்நாடு மிக அதிக, அதிக, மிதமான மற்றும் குறைந்த புயல் மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

(iv) சென்னை, காஞ்சிபுரத்தின் கிழக்குப்பகுதி, விழுப்புரம் மாவட்டத்தின் கிழக்குப் பகுதி, கடலூர் மாவட்டத்தின் வடகிழக்குப் பகுதி மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசம் ஆகிய பகுதிகள் மிக அதிக பாதிப்புக்குள்ளாகும் மண்டலத்தில் அமைந்துள்ளன.

(v) நாகப்பட்டினம், திருவள்ளூர், தென்மேற்குப் பகுதி நீங்கலான திருவாரூர், தஞ்சாவூரின் தென்பகுதி, புதுக்கோட்டை மாவட்டத்தின் கிழக்குப்பகுதி, கடலூர் மாவட்டத்தின்





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

புவியியல்

# அலகு 7 தமிழ்நாடு – மானுட புவியியல்



## கற்றலின் நோக்கங்கள்

- தமிழ்நாட்டின் வேளாண் காரணிகள், முக்கியப் பயிர்கள் மற்றும் அதன் பரவலைப் புரிந்துகொள்ளல்.
- தமிழ்நாட்டின் நீர் வளங்களைப் பற்றி தெரிந்துகொள்ளல்.
- தமிழ்நாட்டின் கனிம மற்றும் தொழிலக வளங்கள் பற்றி கற்றறிதல்.
- தமிழ்நாட்டின் மக்கள் தொகை மற்றும் அதன் கூறுகள் பற்றி பகுப்பாய்வு செய்தல்.
- தமிழ்நாட்டின் – மனிதனால் உருவாக்கப்பட்ட பேரிடரைப் பற்றி தெரிந்து கொள்ளல்.

## பயிற்சி

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படும் டெல்டா ________.**

அ) காவிரி டெல்டா ஆ) மகாநதி டெல்டா
இ) கோதாவரி டெல்டா ஈ) கிருஷ்ணா டெல்டா **[விடை: அ) காவிரி டெல்டா]**

**2. தமிழ்நாட்டு மக்களின் இரண்டாவது முக்கிய உணவுப் பயிர்**

அ) பருப்பு வகைகள் ஆ) சிறுதானியங்கள்
இ) எண்ணெய் வித்துக்கள் ஈ) நெல் **[விடை: ஆ) சிறுதானியங்கள்]**

**3. 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் எழுத்தறிவு சதவீதம் ________**

அ) 80.32 ஆ) 62.33 இ) 73.45 ஈ) 80.33 **[விடை: ஈ) 80.33]**

**4. தமிழ்நாட்டின் மிகப் பெரிய நீர்மின்சக்தி திட்டம் ________**

அ) மேட்டூர் ஆ) பாபநாசம் இ) சாத்தனூர் ஈ) துங்கபத்ரா
**[விடை: அ) மேட்டூர்]**

**5. தமிழ்நாட்டிலுள்ள பெரிய மற்றும் சிறிய துறைமுகங்களின் எண்ணிக்கை ________**

அ) 3 மற்றும் 15 ஆ) 4 மற்றும் 16
இ) 3 மற்றும் 16 ஈ) 4 மற்றும் 15 **[விடை: அ) 3 மற்றும் 15]**



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



நாட்டின் இரண்டாவது பெரிய துறைமுகம் ஆகும். தற்பொழுது 4 இலட்சம் வாகனங்களைக் கையாளும் திறன் கொண்ட பிரத்தியேக முனையம் மேம்படுத்தப்பட்டுள்ளது.


(vi) இடைநிலை துறைமுகமான எண்ணூர் சமீபத்தில் பெரிய துறைமுகமாக மேம்படுத்தப்பட்டு தமிழகத்தில் அதிக நிலக்கரி மற்றும் தாதுக்களைக் கையாளும் துறைமுகமாக உள்ளது.

6. **சாலைப் பாதுகாப்பு விதிகள் பற்றி எழுதவும்.**

(i) சாலை குறியீடுகள் பற்றிய விழிப்புணர்வு.
(ii) நில், கவனி, செல்.
(iii) வாகனம் நெருங்கி வருகிறதா என்பதை உறுதி செய்தல்.
(iv) சாலைகளில் அதிவிரைவாக வாகனங்களை செலுத்துவதைத் தவிர்த்தல்.
(v) பாதசாரிகளுக்கான இடத்தில் சாலையை கடத்தல்.
(vi) வாகனம் ஓட்டும் போது கைகளை நீட்டாதிருத்தல்.
(vii) ஒருபோதும் வளைவுகளில் வாகனங்களை முந்தாமல் நின்று கவனமாக செல்லவும்.

## IX. நில வரைபடப் பயிற்சி.

1. **முக்கிய பயிர் விளையும் பகுதிகள், தாதுக்கள், விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களை தமிழ்நாடு வரைபடத்தில் குறிக்கவும்.**






orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



# கூடுதல் வினாக்கள்

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும். 1 மதிப்பெண்

1. தமிழகத்தில் சுமார் ................ மில்லியன் ஹெக்டர் பரப்பளவில் நெல் பயிரிடப்படுகிறது.
அ) 3 ஆ) 4
இ) 2 ஈ) 5 [விடை : அ) 3]

2. காப்பி உற்பத்தியில் ............. மாநிலத்திற்கு அடுத்து தமிழ்நாடு இரண்டாமிடம் வகிக்கிறது.
அ) கேரளா ஆ) கர்நாடகா
இ) தெலுங்கானா ஈ) ஆந்திரபிதேஷ்
[விடை : ஆ) கர்நாடகா]

3. தமிழ்நாட்டு கடற்கரையின் நீளம் ............ கிலோ மீட்டர் ஆகும்.
அ) 1076 ஆ) 1075
இ) 1074 ஈ) 1072
[விடை : அ) 1076]

4. ............ அணை நாட்டின் மண் - கல் கலவையில் கட்டப்பட்ட மிகப்பெரிய அணைகளுள் ஒன்றாகும்.
அ) மேட்டூர் ஆ) சாத்தூர்
இ) பவானிசாகர் ஈ) கிருஷ்ணகிரி
[விடை : இ) பவானிசாகர்]

5. .......... தமிழ்நாட்டின் நெசவுத்தலைநகர் என்றழைக்கப்படுகிறது.
அ) கரூர் ஆ) கோயம்புத்தூர்
இ) ஈரோடு ஈ) சேலம்
[விடை : அ) கரூர்]

6. வைகை அணை ............. அடி உயரம் கொண்டது. இவ்வணையில் ............. அடி உயரம் மட்டுமே நீரை சேமிக்க முடியும்.
அ) 110; 70 ஆ) 109; 70
இ) 111; 71 ஈ) 108; 70
[விடை : இ) 111; 71]

7. .............. மாவட்டத்திலுள்ள கஞ்சமலையில் இரும்புத் தாது படிவுகள் காணப்படுகின்றன.
அ) நாமக்கல் ஆ) சேலம்
இ) திண்டுக்கல் ஈ) மதுரை
[விடை : ஆ) சேலம்]

8. நிலக்கரி உற்பத்தியில் ..........% நாட்டின் மொத்த உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்களிப்பாகும்.
அ) 55.3 ஆ) 56.3
இ) 54.3 ஈ) 54.2
[விடை : அ) 55.3]

9. ................ சில பகுதிகளில் செயற்கை பட்டு துணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.
அ) ஈரோடு ஆ) காஞ்சிபுரம்
இ) இராமநாதபுரம் ஈ) மதுரை
[விடை : இ) இராமநாதபுரம்]

10. அதிக அளவில் கல்வியறிவு விகிதம் கொண்ட மாவட்டம்
அ) கன்னியாகுமரி ஆ) மதுரை
இ) கோயம்புத்தூர் ஈ) சென்னை
[விடை : அ) கன்னியாகுமரி]

11. இந்தியாவின் மக்களடர்த்தியில் நமது மாநிலம் .......... இடத்தில் உள்ளது.
அ) 11வது ஆ) 12வது
இ) 13வது ஈ) 14வது
[விடை : ஆ) 12வது]

12. தமிழ்நாட்டின் மொத்த இருப்புப்பாதையின் நீளம் ...............
அ) 6,693 கி.மீ. ஆ) 6,694 கி.மீ.
இ) 6,695 கி.மீ. ஈ) 6,696 கி.மீ.
[விடை : அ) 6,693 கி.மீ.]

13. நாட்டில் பதிவாகும் மொத்த விபத்துக்களில் ................ தமிழ்நாட்டில் நடப்பதாக அறிக்கையில் தெரிய வந்துள்ளது.
அ) 15% ஆ) 14%
இ) 13% ஈ) 12%
[விடை : அ) 15%]

14. தமிழ்நாட்டின் மேற்பரப்பு நீரில் .............% அதிகமாக மற்றும் நிலத்தடி நீரில் .............% அதிகமாகவும் பயன்பாட்டிலிருந்து வருகிறது.
அ) 95, 80 ஆ) 80, 70
இ) 90, 80 ஈ) 90, 70
[விடை : அ) 95, 80]

15. தமிழ்நாட்டில் ............% டைட்டானியம் உள்ளது.
அ) 20% ஆ) 30%
இ) 40% ஈ) 50%
[விடை : ஆ) 30%]

16. தமிழ்நாட்டில் 75% ............... கிடைக்கிறது.
அ) நிலக்கரி ஆ) மாலிப்டீனம்
இ) டுனைட் ஈ) வெர்மிகுலைட்
[விடை : ஈ) வெர்மிகுலைட்]

17. தமிழ்நாட்டில் .......... முக்கிய சர்வதேச விமான நிலையங்கள் உள்ளன.
அ) 6 ஆ) 5
இ) 4 ஈ) 3 [விடை : இ) 4]



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



## அலகுத் தேர்வு

**நேரம் : 60 நிமிடங்கள்** **மதிப்பெண்கள் : 25**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (3 × 1 = 3)

1. தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படும் டெல்டா ________
   அ) காவிரி டெல்டா
   ஆ) மகாநதி டெல்டா
   இ) கோதாவரி டெல்டா
   ஈ) கிருஷ்ணா டெல்டா
2. தமிழ்நாட்டு மக்களின் இரண்டாவது முக்கிய உணவுப் பயிர் ________
   அ) பருப்பு வகைகள்
   ஆ) சிறுதானியங்கள்
   இ) எண்ணெய் வித்துக்கள்
   ஈ) நெல்
3. தமிழ்நாட்டின் மிகப்பெரிய நீர்மின்சக்தித் திட்டம்
   அ) மேட்டூர்
   ஆ) பாபநாசம்
   இ) சாத்தனூர்
   ஈ) துங்கபத்ரா

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** (3 × 1 = 3)

4. தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் வேளாண்மை துறையின் பங்கு ........... சதவீதத்தை வகிக்கிறது.
5. சாத்தனூர் அணை ............ ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது.
6. மும்பை மற்றும் டில்லியை அடுத்த இந்தியாவின் மூன்றாவது பெரிய விமான நிலையம் ........

**III. பொருத்துக.** (5 × 1 = 5)

| | | |
|---|---|---|
| 1. | பாக்சைட் | - அ) சேலம் |
| 2. | ஜிப்சம் | - ஆ) சேர்வராயன் மலை |
| 3. | இரும்பு | - இ) கோயம்புத்தூர் |
| 4. | சுண்ணாம்புக்கல் | - ஈ) திருச்சிராப்பள்ளி |
| 5. | ஈரோடு | - உ) மஞ்சள் |

**IV. சரியான கூற்றை கண்டுபிடி.** (1 × 1 = 1)

1. கூற்று: நீலகிரி தமிழ்நாட்டின் குறைந்த மக்கள் தொகை கொண்ட மாவட்டம்
   காரணம்: இது தமிழ்நாட்டின் மேற்கு பகுதியில் அமைந்துள்ளது.
   அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
   ஆ) கூற்று மற்றும் காரணம் சரி. ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல.
   இ) கூற்று சரி. ஆனால் காரணம் தவறு.
   ஈ) கூற்று தவறு. ஆனால் காரணம் சரி.

**V. சுருக்கமாக விடையளி** (2 × 2 = 4)

1. கோயம்புத்தூர் ஏன் தமிழ்நாட்டின் மான்செஸ்டர் என அழைக்கப்படுகிறது?
2. தமிழ்நாட்டின் விமானநிலையங்கள், மற்றும் துறைமுகங்களைப் பட்டியலிடுக.

**VI. வேறுபடுத்துக.** (2 × 2 = 4)

1. கடல்மீன்கள் மற்றும் உள்நாட்டு மீன் பிடித்தல்
2. உணவுப் பயிர்கள் மற்றும் வாணிபப் பயிர்கள்

**VII. விரிவான விடையளிக்கவும்** (1 × 5 = 5)

1. சாலை பாதுகாப்பு விதிகள் பற்றி எழுதவும்.

☆ ☆ ☆

## விடைகள்

I. 1. அ) காவிரி டெல்டா
   2. ஆ) சிறுதானியங்கள்
   3. அ) மேட்டூர்

II. 1. 21%
   2. தென்பெண்ணை
   3. சென்னை சர்வதேச விமான நிலையம்

III. 1. ஆ) சேர்வராயன் மலை
   2. ஈ) திருச்சிராப்பள்ளி
   3. அ) சேலம்
   4. இ) கோயம்புத்தூர்
   5. உ) மஞ்சள்

IV. 1. பார்க்க சூராவின் கையேடு IV - 2

V. 1. பார்க்க சூராவின் கையேடு V - 2
   2. பார்க்க சூராவின் கையேடு V - 5

VI. 1. பார்க்க சூராவின் கையேடு VI - 1
   2. பார்க்க சூராவின் கையேடு VI - 2

VII. 1. பார்க்க சூராவின் கையேடு VIII - 6

☆ ☆ ☆





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

குடிமையியல்

# அலகு 4 இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை



## கற்றலின் நோக்கங்கள்

- இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடுகளை அறிந்துகொள்ளுதல்.
- அணிசேரா இயக்கத்தின் பொருள் மற்றும் முக்கியத்துவத்தை விளக்குதல்.
- நமது வெளியுறவுக் கொள்கையின் படி நிலைகளை ஆய்ந்தறிதல்.
- வெளியுறவுக் கொள்கையின் முக்கியத்துவத்தை விளக்குதல்.
- உள்நாட்டு கொள்கை மற்றும் வெளியுறவு கொள்கை ஆகியவற்றிற்கு இடையேயான வேறுபாட்டினை அறிதல்.

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

**1. இந்தியாவின் அயலுறவுக் கொள்கையை வடிவமைப்பதில் எந்த அமைச்சர் முக்கிய பங்கு வகிக்கிறார்?**

அ) பாதுகாப்பு அமைச்சர் ஆ) பிரதம அமைச்சர்
இ) வெளிவிவகாரங்கள் அமைச்சர் ஈ) உள்துறை அமைச்சர்

[விடை: இ) **வெளிவிவகாரங்கள் அமைச்சர்**]

**2. எந்த இரு நாடுகளுக்கிடையே பஞ்சசீல ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது?**

அ) இந்தியா மற்றும் நேபாளம் ஆ) இந்தியா மற்றும் பாகிஸ்தான்
இ) இந்தியா மற்றும் சீனா ஈ) இந்தியா மற்றும் ஸ்ரீலங்கா

[விடை: இ) **இந்தியா மற்றும் சீனா**]

**3. இந்திய வெளியுறவுக் கொள்கையை ஏற்றுக்கொண்டு வழி நடத்தும் இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு எது?**

அ) சட்டப்பிரிவு 50 ஆ) சட்டப்பிரிவு 51
இ) சட்டப்பிரிவு 52 ஈ) சட்டப்பிரிவு 53

[விடை: ஆ) **சட்டப்பிரிவு 51**]

**4. இன ஒதுக்கல் கொள்கை என்பது**

அ) ஒரு சர்வதேச சங்கம் ஆ) இராஜதந்திரம்
இ) ஒரு இனப் பாகுபாட்டுக் கொள்கை ஈ) மேற்கூறியவைகளில் எதுவுமில்லை

[விடை: ஈ) **மேற்கூறியவைகளில் எதுவுமில்லை**]

**5. 1954 இல் இந்தியா மற்றும் சீனாவால் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தம் இது தொடர்பானது**

அ) வியாபாரம் மற்றும் வணிகம் ஆ) சாதாரண உறவுகளை மீட்டெடுப்பது
இ) கலாச்சார பரிமாற்றங்கள் ஈ) ஐந்து கொள்கைகளுடன் இணைந்திருத்தல்

[விடை: ஈ) **ஐந்து கொள்கைகளுடன் இணைந்திருத்தல்**]



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



(ii) இது தொழில்நுட்ப உதவி கிடைப்பதை மேம்படுத்துதல், மூலதனத்தை பெறுதல், சந்தையினைப் பெறுதல் மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது.

**"கிழக்கே நோக்கு" என்பதிலிருந்து "கிழக்குச் செயல்பாடு" என்ற கொள்கைக்கு படிப்படியான மாற்றம்:**

(i) வடகிழக்கு இந்தியாவிலிருந்து இருந்து தென்கிழக்கு ஆசியா தொடங்குகிறது. மியான்மர் இந்தியாவிற்கும் தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பில் உள்ள நாடுகளுக்கும் (ASEAN) பாலமாக உள்ளது.

(ii) இதன் நோக்கம் ஆசியாவின் ஒருங்கிணைந்த பகுதியாக இருப்பதோடு இந்தோ-பசிபிக் பகுதியில் நிலையான மற்றும் பல்முனை சமநிலையை உறுதிபடுத்துவதாகும்.

(iii) நமது கிழக்கு கொள்கையின் மூன்று முக்கியக்கூறுகள் வலிமையான நிலப்பரப்பு, இணைப்பு, வணிகம் மற்றும் பாதுகாப்பு தொடர்பானவை ஆகியனவாகும்.

**பொருளாதார வளர்ச்சி:**

(i) விரைவான, சமமான மற்றும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி இந்தியாவின் முதன்மைக் குறிக்கோளாக உள்ளது.

(ii) நாடு சர்வதேச பங்களிப்பை மேம்படுத்துவதன் மூலம் அமைதி மற்றும் பாதுகாப்பை உறுதி செய்கிறது.

(iii) இதனை அடைவதற்கு தேவையானவை பொருளாதார வளர்ச்சி, சந்தை, மூலதனம், தொழில்நுட்பம், மரபுப்பிணைப்பு, பணியாளர்திறன், நியாயமான உலகளாவிய நிர்வாகம் மற்றும் ஒரு நிலையான நியாமான வளர்ச்சிக்கு உகந்த சூழல் ஆகியனவாகும்.

**வழிகாட்டும் சக்தியாக இந்தியா:**

(i) ஜி-20 நாடுகள், கிழக்காசிய உச்சிமாநாடு, பிரிக்ஸ் (BRICS) ஆகியவற்றில் உறுப்பு நாடாக இந்தியா இருப்பதும் இந்தியா வேகமாக வளர்ந்து வரும் மிகப்பெரிய பொருளாதாரம் கொண்ட ஒரு நாடாக இருப்பதும் அதன் நிலைக்கு ஒரு சான்றாகும்.

(ii) ஐ.நா. சபையின் பாதுகாப்பு சபையில் ஒரு நிரந்திர உறுப்பு நாடாக இருக்க இந்தியா விரும்புகிறது.

**முடிவுரை:**

தற்போது இந்தியா உலகின் பெரும்பான்மையான நாடுகளுடன் தூதரக உறவுகளைக் கொண்டுள்ளது. மேலும் உலகின் இரண்டாவது மிகப்பெரிய மக்கள் தொகை கொண்ட நாடு, மிகப்பெரிய மக்களாட்சி நாடு மற்றும் வேகமாக வளரும் நாடுகளில் ஒன்றாகவும் விளங்கிவருகிறது.

## கூடுதல் வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும். 1 மதிப்பெண்**

1. **............... நாட்டு மக்களின் சிறந்த நலன்கள், நாட்டின் பரப்பு மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றை பாதுகாக்க முயல்கிறது.**
 அ) வெளியுறவுக் கொள்கை
 ஆ) இராஜ தந்திரம்
 இ) பஞ்சசீலம்
 ஈ) இவற்றில் எதுவுமில்லை
 [விடை: அ) வெளியுறவுக் கொள்கை]

2. **வெளியுறவுக் கொள்கையின் முக்கிய அம்சங்கள் ...............**
 அ) உடன்படிக்கைகள்
 ஆ) நிர்வாக ஒப்பந்தங்கள்
 இ) (அ) மற்றும் (ஆ) இரண்டும்
 ஈ) இவற்றில் எதுவுமில்லை
 [விடை: இ) (அ) மற்றும் (ஆ) இரண்டும்]

3. **வெளிவிவகார அமைச்சரவை .......... என்றும் அழைக்கப்படும்.**
 அ) தேசிய பாதுகாப்பு
 ஆ) வெளியுறவு அமைச்சகம்
 இ) பொருளாதார வளர்ச்சி
 ஈ) இவற்றில் எதுவுமில்லை
 [விடை: ஆ) வெளியுறவு அமைச்சகம்]

4. **இந்திய வெளிநாட்டு சேவை பயிற்சி நிறுவனம் புதுடெல்லியில் நிறுவப்பட்ட ஆண்டு .......... .**
 அ) 1984 ஆ) 1982
 இ) 1988 ஈ) 1986
 [விடை: ஈ) 1986]





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



(iv) பரஸ்பர நலனுக்காக சமத்துவம் மற்றும் ஒத்துழைத்தல்

(v) அமைதியாக சேர்ந்திருத்தல்

இந்த கொள்கைகள் இந்தோனேசியாவில் 1955 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆப்பிரிக்க ஆசிய மாநாட்டில் கையெழுத்தான பாண்டுங் பிரகடனத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

**2. இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படை கருத்துக்கள் என்னென்ன?**

(vi) தேசிய நலனைப் பேணுதல்

(vii) உலக அமைதியை எய்துதல்

(viii) ஆயுதக் குறைப்பு

(ix) பிற நாடுகளுடன் நல்லுறவை வளர்த்தல்

(x) அணிசேராக் கொள்கையின் சுதந்திரமான சிந்தனை மற்றும் செயல்பாடு

(xi) அமைதியான வழிகளில் பிரச்சினைகளைத் தீர்த்தல்

(xii) சர்வதேச விவகாரங்களில் சமத்துவம்

(xiii) காலனியாதிக்கம், ஏகாதிபத்தியம், இனப்பாகுபாடு ஆகியவற்றிற்கு எதிரான நிலைப்பாடு

**3. சார்க் - தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பு விவரிக்கவும்.**

(xiv) சார்க் நாடுகளின் கூட்டமைப்பு என்பது தெற்காசியாவில் அமைந்துள்ள எட்டு நாடுகளின் ஒரு பொருளாதார மற்றும் புவி அரசியல் அமைப்பாகும்.

(xv) சார்க் (SAARC) நாடுகளின் கொள்கை நோக்கமானது நலம்சார் பொருளாதாரத்தை ஊக்குவித்தல், தெற்காசிய நாடுகளிடையே கூட்டுத்தன்னிறைவு மற்றும் இப் பிராந்தியத்தில் சமூக - பண்பாட்டு மேம்பாட்டினை விரைவுபடுத்துதல் ஆகியவையாகும்.

(xvi) சார்க் அமைப்பின் பேரிடர் மேலாண்மை மையம் புதுடெல்லியில் அமைக்கப்பட்டுள்ளது. இம்மையம் தெற்காசியாவில் பேரிடர் குறைப்பு மற்றும் மேலாண்மைக்கான வல்லுனர்களைக் கொண்ட அமைப்பாகும்.

(xvii) இஸ்ரோ (ISRO) அமைப்பு சார்க் பிராந்தியத்திற்கான "செய்தித் தொடர்பு மற்றும் வானிலை ஆய்விற்காக" சார்க் செயற்கைக் கோளை செலுத்த உள்ளது.

☆ ☆ ☆

## அலகுத் தேர்வு

**நேரம் : 60 நிமிடங்கள்** **மதிப்பெண்கள் : 25**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (4 × 1 = 4)

1. எந்த இரு நாடுகளுக்கிடையே பஞ்சசீல ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது?
   - அ) இந்தியா மற்றும் நேபாளம்
   - ஆ) இந்தியா மற்றும் பாகிஸ்தான்
   - இ) இந்தியா மற்றும் சீனா
   - ஈ) இந்தியா மற்றும் ஸ்ரீலங்கா

2. இந்திய வெளியுறவுக் கொள்கையை ஏற்றுக் கொண்டு வழிநடத்தும் இந்திய அரசியலமைப்புச் சட்டபிரிவு எது?
   - அ) சட்டபிரிவு 50 ஆ) சட்டபிரிவு 51
   - இ) சட்டபிரிவு 52 ஈ) சட்டபிரிவு 53

3. இன ஒதுக்கல் கொள்கை என்பது
   - அ) ஒரு சர்வதேச சங்கம்
   - ஆ) இராஜதந்திரம்
   - இ) ஒரு இனப்பாகுபாட்டுக் கொள்கை
   - ஈ) மேற்கூறியவைகளில் எதுவுமில்லை

4. ராணுவம் சாராத பிரச்சினைகள் என்பது.
   - அ) ஆற்றல் பாதுகாப்பு ஆ) நீர் பாதுகாப்பு
   - இ) தொற்று நோய்கள் ஈ) இவை அனைத்தும்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** (4 × 1 = 4)

5. இந்தியா தனது முதல் அணு சோதனையை நடத்திய இடம் __________.

6. ________ என்பது ஓர் அரசின் வெளியுறவுக் கொள்கையை செயல்படுத்துவதற்கான கருவி ஆகும்.

7. இரு வல்லரசுகளின் பனிப்போரினை எதிர்கொள்ள இந்தியா பின்பற்றிய கொள்கை ________.

8. நமது மரபு மற்றும் தேசிய நெறிமுறைகள் ________ நடைமுறைப்படுத்துவதாகும்.

**III. பொருத்துக** (4 × 1 = 4)

| | | | |
|---|---|---|---|
| 9. | இந்திய கெருங்கடலில் அமைந்துள்ளது | அ) | 1954 |
| 10. | பஞ்சசீலம் | ஆ) | 1955 |
| 11. | உலக அமைதி | இ) | மாலத்தீவு |
| 12. | ஆப்பிரிக்க – ஆசிய மாநாடு | ஈ) | வெளியுறவுக் கொள்கை |





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

குடிமையியல்

# அலகு 5 இந்தியாவின் சர்வதேச உறவுகள்



## கற்றலின் நோக்கங்கள்

- நமது அண்டை நாடுகளுடனான கொள்கைகள் குறித்துப் புரிந்துகொள்ளுதல்.
- வளர்ந்த நாடுகள் குறித்த இந்தியாவின் கொள்கையின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்ளுதல்.
- சர்வதேச நிறுவனங்களுடனான இந்தியாவின் உறவுகள் பற்றிய அறிவைப்பெறுதல்.
- பிரிக்ஸ் (BRICS) மற்றும் ஒபெக் (OPEC) நிறுவனங்களின் சாதனைகளை அறிதல்.
- உலக நாடுகளிடையே இந்தியாவின் உன்னத நிலை குறித்த மதிப்பினை உள்வாங்குதல்.

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

**1. மக்மகான் எல்லைக்கோடு எந்த இரு நாடுகளுக்கும் இடையே உள்ள எல்லை ஆகும்?**

அ) பர்மா – இந்தியா ஆ) இந்தியா – நேபாளம்
இ) இந்தியா – சீனா ஈ) இந்தியா – பூடான் **[விடை: இ) இந்தியா – சீனா]**

**2. இந்தியா பின்வருவனவற்றுள் எந்த அமைப்பில் உறுப்பினராக இல்லை?**

அ) ஜி 20 ஆ) ஏசியன் (ASEAN)
இ) சார்க் (SAARC) ஈ) பிரிக்ஸ் (BRICS) **[விடை: ஆ ) ஏசியன் (ASEAN)]**

**3. ஒபெக் (OPEC) என்பது**

அ) சர்வதேச காப்பீட்டு நிறுவனம்
ஆ) ஒரு சர்வதேச விளையாட்டுக் கழகம்
இ) எண்ணெய் ஏற்றுமதி நிறுவனங்களின் அமைப்பு
ஈ) ஒரு சர்வதேச நிறுவனம் **[விடை: இ) எண்ணெய் ஏற்றுமதி நிறுவனங்களின் அமைப்பு]**

**4. இந்தியா தனது மிக நீண்ட நில எல்லையை எந்த நாட்டோடு பகிர்ந்து கொள்கிறது?**

அ) வங்காளதேசம் ஆ) மியான்மர்
இ) ஆப்கானிஸ்தான் ஈ) சீனா **[விடை: அ) வங்காளதேசம்]**



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



| | | |
|---|---|---|
| பி.சி.ஐ.எம் (BCIM) | வங்காள தேசம், சீனா, இந்தியா, மியான்மர் | இயற்கைப் பேரழிவுகள் மற்றும் தரவு மீறல்கள் போன்ற அச்சுறுத்தல் களை சமாளிக்கவும் வணிக நலன் பாதுகாப்பிற்கும் |
| ஜி.சி.சி (GCC) வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சில் | பஹ்ரைன், குவைத், ஓமன், கத்தார், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு நாடுகள், இந்தியா | பொதுவான நோக்கங்கள் மற்றும் ஒத்த அரசியல் மற்றும் கலாச்சார அடையாளங் களின் அடிப்படையில் ஒற்றுமையை அடைய |

**2. பிரிக்ஸ் (BRICS) கூட்டமைப்பு உருவானதற்ககான காரணம் மற்றும் அதன் நோக்கங்களை எழுதுக.**

**பிரிக்ஸ் கூட்டமைப்பு உருவாவதற்கான காரணம்:**

(v) உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்திற்கு ஒரு மாற்றாகவும், அமெரிக்க மேலாதிக்கத்திற்குப் போட்டியாகவும் பிரிக்ஸ் நாடுகள் கூட்டமைப்பு தோற்றுவிக்கப்பட்டது.

(vi) உறுப்பு நாடுகளிடையே பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றவும், சொந்த மற்றும் சுயமாக நிரூபிக்கும் விதமாக இக்கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

**பிரிக்ஸின் நோக்கங்கள்**

(i) பிராந்திய வளர்ச்சியை அடைவது

(ii) வளர்ந்த மற்றும் வளரும் நாடுகள் இடையே பாலமாக செயல்படுவது

(iii) மனித மேம்பாட்டிற்கு மிகப்பரந்த அளவில் பங்களிப்பு செய்தல்

(iv) அதிக சமத்துவம் மற்றும் நியாயமான உலகத்தை ஏற்படுத்துதல்

(v) வணிக ஒத்துழைப்பை அதிகரிக்க பிரிக்ஸ் நாடுகளுக்கிடையே உள்நாட்டு நாணயங்கள் மூலம் வணிகம் மேற்கொள்வதை ஊக்குவித்தல் மற்றும் நடப்பு சர்வதேச சிக்கல்களை எதிர்கொள்ளுதல்.

(vi) உறுப்பு நாடுகளிடையே தகவல் தொழில் நுட்பங்களை பரிமாறிக் கொள்வதை ஊக்குவித்தல் உறுப்பு நாடுகளில் வேலைவாய்ப்பு வறுமை ஒழிப்பு பொருளாதார மாற்றங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துதல்.

**3. பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகள் அமைப்பின் (OPEC) திட்டம் குறித்தும் அவ்வமைப்பு எவ்வாறு பிற நாடுகளுக்கு உதவி செய்கின்றன என்பது குறித்தும் குறிப்பிடுக.**

**பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகள் அமைப்பின் திட்டம்:**

(i) அதன் உறுப்பு நாடுகளுக்குள் எண்ணெய் கொள்கைகளை ஒருங்கிணைத்தல்

(ii) எண்ணெய் சந்தையை நிலைநிறுத்த உதவுதல்

(iii) பெட்ரோலிய உற்பத்தியாளர்களுக்கு நியாயமான நிலையான வருவாய் கிடைப்பதை உறுதி செய்தல்.

(iv) எண்ணெய் நுகர்வு செய்யும் நாடுகளுக்குத் திறமையான சிக்கனமான, வழக்கமான விநியோகத்தை அளித்தல்.

(v) பெட்ரோலியத் தொழிலில் முதலீடு செய்பவர்களுக்கு மூலதனத்திற்கு நியாயமான வருவாய் கிடைக்கச் செய்தல்.

**ஒபெக் பிறநாடுகளுக்கு செய்யும் உதவிகள்**

(i) பெட்ரோலிய ஏற்றுமதி செய்யும் நாடுகளின் சர்வதேச மேம்பாட்டு நிதி (OPID) என்பது குறைந்த வட்டி வீதத்தில் கடன் அளிக்கும் நிதி நிறுவனம் ஆகும். இது சமூக மற்றும் மனிதாபிமானத் திட்டங்களுக்கு மானியங்களை வழங்குகிறது.

(ii) புத்தகங்கள், அறிக்கைகள், வரைபடங்கள், பெட்ரோலிய எரிசக்தி மற்றும் எண்ணெய் சந்தை தொடர்பான மாநாட்டு நடவடிக்கைகள் உள்பட 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொகுதிகளைக் கொண்ட ஒரு தகவல் மையத்தை ஒபெக் கொண்டுள்ளது.

(iii) இத்தகவல் மையம் பொதுமக்களாலும் பெரும்பாலும் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவர்களாலும் அடிக்கடி பயன்படுத்தப்பட்டு வருகிறது.





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



# கூடுதல் வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும். 1 மதிப்பெண்**

1. **அண்டை நாட்டுறவைப் பொருத்தவரையில் ............ ஒரு உன்னத நிலையை கொண்டுள்ளது.**
அ) இந்தியா ஆ) அமெரிக்கா
இ) பிரட்டன் ஈ) ரஷ்யா
[விடை: அ) இந்தியா]

2. **தென்கிழக்கில் .......... தென்மேற்கில் .......... போன்ற இந்தியாவிற்கு மிக அருகில் அமைந்துள்ள இரு நாடுகளும் இந்திய பெருங்கடலால் பிரிக்கப்பட்டுள்ளன.**
அ) இலங்கை, நேபாளம்
ஆ) இலங்கை, மாலத்தீவு
இ) மத்திய ஆசியா, ஆப்கானிஸ்தான்
ஈ) இவற்றில் எதுவுமில்லை
[விடை: ஆ) இலங்கை, மாலத்தீவு]

3. **............,..........வும் அதிக எண்ணிக்கையிலான அண்டை நாடுகளுடன் தனது எல்லையை பகிர்ந்து கொள்கின்றன.**
அ) சீனா, ரஷ்யா ஆ) சீனா, அமெரிக்கா
இ) இலங்கை, சீனா
ஈ) இலங்கை, பிரிட்டன்
[விடை: அ) சீனா, ரஷ்யா]

4. **............ சுதந்திரத்தை அங்கீகரித்த முதல் நாடு இந்தியா ஆகும்.**
அ) ஆப்கானிஸ்தான் ஆ) பூடான்
இ) வங்காள தேசம் ஈ) நேபாளம்
[விடை: இ) வங்காள தேசம்]

5. **கங்கை நீரை பகிர்ந்து கொள்ள ............ இல் கையெழுத்தான பராக்கா ஒப்பந்தம் ஒரு வரலாற்று ஒப்பந்தமாகும்.**
அ) 1977 ஆ) 1970
இ) 1974 ஈ) 1976
[விடை: அ) 1977]

6. **இந்தியாவிற்கும் வங்காள தேசத்திற்கும் பொதுவானதாக உள்ள ............ நதிகளிலிருந்து அதிகபட்ச நலனை பெறுவதற்காக இரு நாட்டு கூட்டு நிதி ஆணையம் செயல்படுகிறது.**
அ) 32 ஆ) 40
இ) 46 ஈ) 54
[விடை: ஈ) 54]

7. **............வும், ..................வும் உலக வர்த்தக நிறுவனம், சர்வதேச காலநிலை மாற்றம் குறித்த பேச்சுவார்த்தைகள், உலக வங்கி சீர்திருத்தம் ஆகியவற்றில் ஒத்த கருத்தைக் கொண்டுள்ளன.**
அ) இந்தியா, சீனா
ஆ) இந்தியா, மாலத்தீவு
இ) இந்தியா, பூடான்
ஈ) இந்தியா, ஆப்கானிஸ்தான்
[விடை: அ) இந்தியா, சீனா]

8. **இந்தியாவும், சீனாவும் ............ பரிமாற்ற திட்டத்தில் கையெழுத்திட்டுள்ளன.**
அ) போக்குவரத்து ஆ) வர்த்தகம்
இ) கல்வி ஈ) தொழில்துறை
[விடை: இ) கல்வி]

9. **இந்தியாவின் எரிபொருள் தேவைகளான பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஆகியவற்றில் முக்கிய பங்குதாரராக ............ உள்ளது.**
அ) மியான்மர் ஆ) சீனா
இ) பூடான் ஈ) வங்கதேசம்
[விடை: அ) மியான்மர்]

10. **இந்தியாவுடன் ஆன உறவுகளை பராமரிப்பதில் ............ விரோத மனப்பான்மையுடனே இருந்து வருகின்றது.**
அ) சீனா ஆ) இலங்கை
இ) வங்கதேசம் ஈ) பாகிஸ்தான்
[விடை: ஈ) பாகிஸ்தான்]

11. **............ ஆம் ஆண்டு தீர்மானிக்கப்பட்ட போர் நிறுத்தக் கோடு என்றழைக்கப்பட்டது.**
அ) 1949 ஆ) 1972
இ) 1947 ஈ) 1964
[விடை: அ) 1949]

12. **............ மற்றும் ........... உறவு நட்பு ரீதியாக அமைந்து இருக்கிறது.**
அ) இந்தியா மற்றும் சீனா
ஆ) இந்தியா மற்றும் நேபாளம்
இ) இந்தியா மற்றும் இலங்கை
ஈ) இந்தியா மற்றும் பூடான்
[விடை: இ) இந்தியா மற்றும் இலங்கை]

13. **.................. மெட்ரோ ரயில் ஜப்பானிய ஒத்துழைப்பில் உருவான வெற்றிகரமான எடுத்துக்காட்டுகளில் ஒன்றாகும்.**
அ) மும்பை ஆ) டெல்லி
இ) கொல்கத்தா ஈ) சென்னை
[விடை: ஆ) டெல்லி]





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

பொருளியல்

# அலகு 3
# உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து




## கற்றலின் நோக்கங்கள்

- உணவு பாதுகாப்பின் வரையறை, பொருள் பற்றி படித்தல்.
- உணவு தானியங்கள் கிடைத்தல் மற்றும் அணுகுதல் பற்றி அறிந்து கொள்ளுதல்.
- வாங்கும் திறன் மற்றும் விவசாயக் கொள்கை பற்றி புரிந்து கொள்ளுதல்.
- வறுமையின் பல பரிமாணத்தன்மை பற்றிய அறிவைப்பெறுதல்.
- தமிழ்நாட்டில் ஊட்டச்சத்து, சுகாதார நிலை மற்றும் கொள்கைகள் பற்றி படித்தல்.

## பயிற்சி

### I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.

**1.** **________ என்பது விரும்பிய அளவுகளில் உணவு இருப்பு இருப்பது, உள்நாட்டு உற்பத்தியில் இருப்பில் மாற்றங்கள் மற்றும் இறக்குமதி பற்றிய ஒரு செயல்பாடாகும்.**

அ) உணவு கிடைப்பது ஆ) உணவுக்கான அணுகல்
இ) உணவின் முழு ஈடுபாடு ஈ) இவை ஏதுமில்லை [விடை: அ) **உணவு கிடைப்பது**]

**2.** **தாங்கியிருப்பு என்பது உணவுப் பங்கு தானியங்கள் அதாவது கோதுமை மற்றும் அரிசியை ________ மூலம் அரசாங்கம் கொள்முதல் செய்கிறது.**

அ) FCI ஆ) நுகர்வோர் கூட்டுறவு
இ) ICICI ஈ) IFCI [விடை: அ) **FCI**]

**3.** **எது சரியானது?**

**i) HYV - அதிக விளைச்சல் தரும் வகைகள்**
**ii) MSP - குறைந்தபட்ச ஆதரவு விலை**
**iii) PDS - பொது விநியோக முறை**
**iv) FCI - இந்திய உணவுக் கழகம்**

அ) i மற்றும் ii சரியானவை ஆ) iii மற்றும் iv சரியானவை
இ) ii மற்றும் iii சரியானவை ஈ) மேற்கூறிய அனைத்தும் சரி.

[விடை: ஈ) **மேற்கூறிய அனைத்தும் சரி**]



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



**5. இந்தியாவின் வேளாண் கொள்கையின் சில முக்கிய நோக்கங்களை சுருக்கமாக எழுதுக.**

முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:

**உள்ளீடுகளின் உற்பத்தித் திறனை உயர்த்துதல்**

இந்தியாவின் விவசாயக் கொள்கையின் முக்கியமான நோக்கங்களில் ஒன்று வீரிய வித்து விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள், நீர்ப்பாசன திட்டங்கள் போன்ற வாங்கிய உள்ளீடுகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதாகும்.

**ஒரு ஹெக்டேருக்கு மதிப்பு கூட்டப்பட்டவை:**

வேளாண் கொள்கையானது பொதுவாக வேளாண்மையின் உற்பத்தித்திறனை உயர்த்துவதன் மூலமும், குறிப்பாக சிறிய மற்றும் ஓரளவு வைத்திருக்கும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதன் மூலமும் உடல் ரீதியிலான உற்பத்தியை உயர்த்துவதைவிட ஒரு ஹெக்டேருக்கு மதிப்பு கூட்டப்படுவதை அதிகரிப்பதாகும்.

**ஏழை விவசாயிகளின் நலன்களைப் பாதுகாத்தல்:**

ஏழை விவசாயிகளுக்கு நிறுவன கடன் ஆதரவை விரிவுபடுத்துதல், நில சீர்திருத்தங்கள் செய்தல், இடைத்தரகர்களை ஒழித்தல் மற்றும் சிறு விவசாயிகளின் நலனை பாதுகாப்பதே இதன் நோக்கமாகும்.

**விவசாயத் துறையை நவீனமயமாக்குதல்:**

விவசாயக் கொள்கை ஆதரவில் விவசாய நடவடிக்கைகளில் நவீன தொழில்நுட்பம், HYV விதைகள் மற்றும் உரங்கள் போன்ற மேம்பாட்டை அறிமுகப்படுத்துதல்.

**சுற்றுச்சூழல் சீரழிவு**

இந்திய விவசாயத்தின் இயற்கை அடித்தளத்தின் சுற்றுச்சூழல் சீரழிவை சரிபார்க்க இந்தியாவின் விவசாயக் கொள்கை மற்றொரு நோக்கத்தை அமைத்துள்ளது.

**அதிகாரத்துவ தடைகளை நீக்குதல்**

விவசாயிகள் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் சுய உதவி நிறுவனங்கள் மீதான அதிகாரத்துவ தடைகளை நீக்குவதற்கு இந்த கொள்கை மற்றொரு குறிக்கோளை அமைத்துள்ளது.

**6. பல பரிமாண வறுமைக் குறியீடு - இந்தியா மற்றும் தமிழ்நாடு பற்றி விவாதிக்கவும்.**

**இந்தியாவின் பல பரிமாண வறுமை குறியீடு (2018)**

ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டம் (UNDP) மற்றும் ஆக்ஸ்போர்டு வறுமை மற்றும் மனித மேம்பாட்டு முனைவு (OPHI) ஆகியவற்றால் தயாரிக்கப்பட்ட பல பரிமாண வறுமைக் குறியீடு 2018 அறிக்கை, இந்தியாவைப் பற்றி பின்வருமாறு கூர்ந்து உருவாக்கியுள்ளது.

(i) இந்தியா தனது வறுமை விகிதத்தை 10 ஆண்டுகளில் 55%லிருந்து 28% ஆக வெகுவாக குறைந்துள்ளது. 2005-2006 மற்றும் 2015-2016 ஆம் ஆண்டிற்கு இடையில் 271 மில்லியன் மக்களை வறுமையிலிருந்து விடுவித்தனர்.

(ii) இந்தியாவில் 2015-2016ஆம் ஆண்டில் 364 மில்லியன் ஏழை மக்கள் இருந்தனர். இது எந்த ஒரு நாட்டிற்கும் மிகப்பெரியதாகும். இருப்பினும் 2005-2006ஆம் ஆண்டில் 635 மில்லியனாக இருந்ததை குறைத்துள்ளது.

(iii) 2015-2016ஆம் ஆண்டில் பல பரிமாண வறுமை குறியீடு ஏழைகளாக இருந்த 364 மில்லியன் மக்களில், 156 மில்லியன் குழந்தைகளாகும். 2005-2006 ஆம் ஆண்டில் இந்தியாவில் 292 மில்லியன் ஏழைக் குழந்தைகள் இருந்தனர். இது 47% குறைவு அல்லது பல பரிமாண வறுமையில் வளர்ந்து வரும் 136 மில்லியன் குறைவான குழந்தைகளை குறிக்கிறது.

(iv) பழங்குடியினரைச் சேர்ந்த 80% மக்கள் 2005-2006ஆம் ஆண்டில் ஏழைகள், அவர்களில் 50% பேர் இன்னும் ஏழைகளாக உள்ளனர்.

(v) 2015-2016ஆம் ஆண்டில் வறுமையால் பாதிக்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட மிக ஏழ்மையான மாநிலமாக பீகார் இருந்தது.

**தமிழ்நாட்டின் பல பரிமாண வறுமை குறியீடு அறிக்கை (2018)**

(i) கடந்த பத்து ஆண்டுகளாக, வறுமைக் குறைப்பில் தமிழகம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது.

(ii) தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்கள் மூன்று வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை
- உயர் வறுமை மாவட்டங்கள்
- மிதமான வறுமை மாவட்டங்கள்
- குறைந்த அளவிலான வறுமை மாவட்டங்கள்

(iii) 1994க்குப் பிறகு, தமிழ்நாட்டின் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் வறுமை





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



# கூடுதல் வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும். 1 மதிப்பெண்**

**1. 1980ல் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் தொடங்கப்பட்ட இடம் .......... .**
அ) கேரளா ஆ) கர்நாடகா
இ) தமிழ்நாடு ஈ) ஆந்திரபிரதேசம்
[விடை: இ) தமிழ்நாடு]

**2. ஊட்டச்சத்து என்பது உடல் நலம் மற்றும் மற்றும் வளர்ச்சிக்குத் தேவையான ............ஐ வழங்கும் அல்லது பெறும் செயல்முறையாகும்.**
அ) பொருளை ஆ) உணவை
இ) பணத்தை ஈ) செல்வத்தை
[விடை: ஆ) உணவை]

**3. UNDP விரிவாக்கம் தருக.**
அ) United National Development programme
ஆ) United National Decline Programme
இ) Universal Narrow Development Programme
ஈ) United National Development Policy
[விடை: அ) United National Development programme]

**4. தமிழ்நாட்டில் ஊட்டச்சத்து கூட்டணி அறிமுகப் படுத்தியவர் ........... .**
அ) அகரம் நிறுவனம் ஐ.நா. ஆர். ஆர். சி
ஆ) அப்துல்கலாம் அறக்கட்டளை மற்றும் இஸ்ரோ
இ) எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை மற்றும் UNICEF
ஈ) ஆதிசெய்வம் அறக்கட்டளை மற்றும் UNO
[விடை: இ) எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை மற்றும் UNICEF]

**5. ........... என்பது முதன்மையாக வாங்கும் திறன் பற்றிய கூற்றாகும்.**
அ) உணவினை உறிஞ்சுதல்
ஆ) உணவுக்கான அணுகல்
இ) உணவு கிடைத்தல்
ஈ) ஏதுமில்லை
[விடை: ஆ) உணவுக்கான அணுகல்]

**6. .......... என்பது உட்கொள்ளும் உணவை உயிரியல் ரீதியாகப் பயன்படுத்துவதற்கான திறன் ஆகும்.**
அ) உணவினை உறிஞ்சுதல்
ஆ) உணவுக்கான அணுகல்
இ) உணவு கிடைத்தல்
ஈ) மேற்கூறிய அனைத்தும்
[விடை: அ) உணவினை உறிஞ்சுதல்]

**7. உணவு தானிய உற்பத்தியில் இந்த வளர்ச்சி ஒரு தொகுப்பாக செயல்படுத்தப்பட்ட.......... திட்டத்தால் சாத்தியமானது.**
அ) FCI ஆ) PDS
இ) MSP ஈ) HYV
[விடை: ஈ) HYV]

**8. 1950 களின் முற்பகுதியில் உணவு தானியங்களின் உற்பத்தி பரப்பளவு ........... ஹெக்டருக்கும் அதிகமாக இருந்தது.**
அ) 75 மில்லியன் ஆ) 85 மில்லியன்
இ) 98 மில்லியன் ஈ) 100 மில்லியன்
[விடை: இ) 98 மில்லியன்]

**9. உணவு நிலையை சீர்செய்ய ஏறத்தாழ .......... ஆண்டுகள் ஆனது.**
அ) 25 ஆ) 30
இ) 50 ஈ) 65
[விடை: ஈ) 65]

**10. பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை பருவ காலத்தின் தொடக்கத்தில் அறிவிக்கப்பட்டு, அறுவடை செய்யப்பட்ட தானியங்களை ......... மூலம் அரசு கொள்முதல் செய்கிறது.**
அ) இந்திய உணவுக் கழகம்
ஆ) தேசிய உணவு பாதுகாப்பு கழகம்
இ) TNHSP ஈ) ஏதுமில்லை
[விடை: அ) இந்திய உணவுக் கழகம்]

**11. தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் (NFSA) .......... கிராமப்புற குடும்பங்களை உள்ளடக்கியதாகும்.**
அ) 25% ஆ) 50%
இ) 75% ஈ) 100%
[விடை: இ) 75%]

**12. விவசாயப் பொருட்களின் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட ............ கொள்கை 2018-ல் மத்திய அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டது.**
அ) நுகர்வோர் கூட்டுறவு கழகம்
ஆ) புதிய விவசாயக் கொள்கை
இ) தொழிற்துறை புரட்சி
ஈ) ஏதுமில்லை
[விடை: இ) தொழிற்துறை புரட்சி]





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores




**நியாய விலை கடைகள்**

(i) தற்போது 33,222 நியாய விலைக் கடைகள் 1.98 கோடி குடும்பங்களுக்கு சேவை புரிகிறது.
(ii) 33,222 நியாய விலைக்கடைகளில் 31,232 கடைகள் கூட்டுறவு சங்கங்களால் நடத்தப்படுகின்றன.
(iii) 1,394 கடைகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நடத்தப்படுகின்றன.
(iv) 596 கடைகள் பெண்கள் சுயஉதவி குழுக்களால் நடத்தப்படுகின்றன.
(v) நியாய விலைக் கடைகள் வாழ்விடங்களுக்கு அருகிலேயே அமைந்திருப்பது அவசியம்.
(vi) புதிய நியாய விலை கடைகளைத் திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**4. இந்தியாவின் பல பரிமாண வறுமை குறியீடு 2018 பற்றி விவரி.**

(i) ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டம் (UNDP) மற்றும் ஆக்ஸ்போர்டு வறுமை மற்றும் மனித மேம்பாட்டு முனைவு (OPH) ஆகியவற்றால் தயாரிக்கப்பட்ட பல பரிமாண வறுமைக் குறியீடு 2018 அறிக்கை, இந்தியாவைப் பற்றி பின்வருமாறு கூர்ந்து உருவாக்கியுள்ளது.
(ii) இந்தியா தனது வறுமை விகிதத்தை 10 ஆண்டுகளில் 55% லிருந்து 28% ஆக வெகுவாக குறைந்துள்ளது. 2005-2006 மற்றும் 2015-2016ஆம் ஆண்டிற்கு இடையில் 271 மில்லியன் மக்களை வறுமையிலிருந்து விடுவித்தனர்.
(iii) இந்தியாவில் 2015-2016ஆம் ஆண்டில் 364 மில்லியன் ஏழை மக்கள் இருந்தனர். இருப்பினும் 2005-2006ஆம் ஆண்டில் 635 மில்லியனாக இருந்ததை குறைந்துள்ளது.
(iv) 2015-2016ஆம் ஆண்டில் பல பரிமாண வறுமை குறியீடு ஏழைகளாக இருந்த 364 மில்லியன் மக்களில், 156 மில்லியன் குழந்தைகளாகும்.
(v) இது 47% குறைவு அல்லது பல பரிமாண வறுமையில் வளர்ந்து வளரும் 136 மில்லியன் குறைவான குழந்தைகளை குறிக்கிறது.
(vi) பழங்குடியினரைச் சேர்ந்த 80% மக்கள் 2005-06ஆம் ஆண்டில் ஏழைகள், அவர்களில் 50% பேர் இன்னும் ஏழைகளாக உள்ளனர்.
(vii) 2015-16ஆம் ஆண்டில் வறுமையால் பாதிக்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட மிக ஏழ்மையான மாநிலமாக பீகார் இருந்தது.




**பல பரிமாண வறுமை குறியீடு பத்து குறியீடுகள்**

(viii) பீகார், ஜார்கண்ட், உத்திரப்பிரதேசம் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய நான்கு ஏழ்மையான மாநிலங்கள் இன்னும் 196 மில்லியன் பல பரிமாண வறுமை குறியீடுள்ள ஏழை மக்களைக் கொண்டுள்ளன.
(ix) 2006ஆம் ஆண்டில் கேரளா மிகக் குறைந்த ஏழ்மை வட்டாரங்களில் ஒன்றாக இருந்தது.
(x) அது பல பரிமாண வறுமை குறியீட்டை சுமார் 92% குறைத்துள்ளது.

☆ ☆ ☆





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



# அலகு 4 அரசாங்கமும் வரிகளும்




## கற்றலின் நோக்கங்கள்

- வளர்ச்சிக் கொள்கைகள் மற்றும் அரசாங்கத்தின் பங்கு பற்றி புரிந்துக் கொள்ளுதல்.
- வரி மற்றும் அதன் வகைகளைப் பற்றிய அறிவைப் பெறுதல்.
- வரி எவ்வாறு விதிக்கப்படுகிறது என்பதைப் பற்றிப் படித்தல்.
- கருப்பு பணத்திற்கும், வரி ஏய்ப்பிற்கும் உள்ள நோக்கத்திற்கான அறிவைப் பெறுதல்.
- வரிக்கும், மற்ற கட்டணத்திற்கும் உள்ள வேறுபாட்டை தெரிந்து கொள்ளுதல்.
- வரிகளும் மற்றும் அவற்றின் முன்னேற்றம் பற்றி புரிந்து கொள்ளுதல்.

## பயிற்சி

### I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. இந்தியாவிலுள்ள மூன்று நிலைகளான அரசுகள்**

அ) மைய, மாநில மற்றும் உள்ளாட்சி ஆ) மைய, மாநில மற்றும் கிராம
இ) மைய, நகராட்சி மற்றும் பஞ்சாயத்து ஈ) ஏதுமில்லை

[விடை: அ) **மைய, மாநில மற்றும் உள்ளாட்சி**]

**2. இந்தியாவில் உள்ள வரிகள்**

அ) நேர்முக வரிகள் ஆ) மறைமுக வரிகள்
இ) இரண்டும் (அ) மற்றும் (ஆ) ஈ) ஏதமில்லை

[விடை: இ) **இரண்டும் (அ) மற்றும் (ஆ)**]

**3. வளர்ச்சிக் கொள்கையில் அரசாங்கத்தின் பங்கு எது ?**

அ) பாதுகாப்பு ஆ) வெளிநாட்டுக் கொள்கை
இ) பொருளாதாரத்தை கட்டுப்படுத்தல் ஈ) மேற்கூறிய அனைத்தும்

[விடை: ஈ) **மேற்கூறிய அனைத்தும்**]

**4. இந்தியாவில் தனி நபர்களின் மேல் விதிக்கப்படுகின்ற பொதுவான மற்றும் மிக முக்கியமான வரி**

அ) சேவை வரி ஆ) கலால் வரி
இ) விற்பனை வரி ஈ) மத்திய விற்பனை வரி [விடை: இ) **விற்பனை வரி**]

**5. ஒரு நாடு, ஒரே மாதிரியான வரி என்பதை எந்த வரி உறுதிபடுத்துகிறது?.**

அ) மதிப்புக் கூட்டு வரி (VAT) ஆ) வருமான வரி
இ) பண்டங்கள் மற்றும் பணிகள் வரி ஈ) விற்பனை வரி

[விடை: இ) **பண்டங்கள் மற்றும் பணிகள் வரி**]



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



**கருப்பு பணத்திற்கான காரணங்கள் :**

**பண்டங்கள் பற்றாக்குறை :**

கருப்பு பணம் இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ பண்டங்கள் பற்றாக்குறை ஏற்படுவதற்கு மூலக்காரணமாக உள்ளது.

**உரிமம் பெறும் முறை :**

கட்டுப்பாட்டு அனுமதி, ஒதுக்கீடு மற்றும் உரிமங்களின் அமைப்பு, பொருட்களின் குறைவான அளிப்பினால் தவறான விநியோகத்துடன் தொடர்புடையது என்று உறுதியாக நம்பப்படுகிறது.

**தொழிற் துறையின் பங்கு :**

(i) கருப்புப் பணம் தோன்றுவதற்கு மிக முக்கியமான பங்கு வகிப்பது தொழில் துறையாகும்.

(ii) **உதாரணமாக:** வரையறுக்கப்பட்ட பொதுத் துறை நிறுவனங்களின் கட்டுப்பாட்டாளர் பண்டங்களை மிகவும் குறைவான விலைக்கு வாங்க முயற்சி செய்வது.

**கடத்தல் :**

(i) கருப்பு பணத்திற்கு கடத்தல் ஒரு முக்கிய ஆதாரமாகும்.

(ii) இந்தியா கடுமையான பரிமாற்ற முறைகளைக் கொண்டிருந்த போது விலை உயர்ந்த பொருட்களான தங்கம், வெள்ளி, ஜவுளிகள், மின்னணுப் பொருட்கள் ஆகியவற்றுக்கு சுங்கத் தீர்வை அதிகமாக விதிக்கப்பட்டது. அதிகாரிகளை மீறி இந்தப் பொருட்களைக் கொண்டு வருவது கடத்தலாகும்.

**வரியின் அமைப்பு :**

வரி விகிதம் அதிகமாக இருக்கும் போது, கருப்பு பணம் தோன்றக் காரணமாக அமைகிறது.

5. **பொருளாதார முன்னேற்றத்தில் வரி விதிப்பின் பங்கினை விளக்குக.**

பொருளாதார முன்னேற்றத்தில் வரி விதிப்பின் பங்கு பின்வருமாறு :

**வளங்களைத் திரட்டுதல் :**

(i) வரிவிதிப்பு அரசாங்கத்திற்கு கணிசமான அளவிற்கு வருவாய் திரட்டுவதற்கு உதவுகிறது.

(ii) குறிப்பாக நேர்முக வரிமுறையான தனிநபர் வருமான வரி, நிறுவன வரி மற்றும் மறைமுக வரிகளான ஆயத்தீர்வை, சுங்கவரி போன்றவை ஆகும்.

**வருமான ஏற்றதாழ்வுகளை குறைத்தல் :**

(i) வரியின் மூலம் சமத்துவ முறையை உருவாக்கலாம்.

(ii) நேர்முக வரியிலும், மறைமுக வரியிலும் வளர்வீத வரிமுறை பின்பற்றப்படுகிறது.

**சமூக நலன் :**

(i) வரி விதிப்பு சமூக நலனை உருவாக்குகிறது.

(ii) சில விரும்பத்தகாத பொருட்களான மதுபானங்கள் மீது அதிக வரிவிதிப்பதன் மூலம் சமூக நலன் பாதுகாக்கப்படுகிறது.

**அந்நியச் செலாவணி :**

(i) வரிவிதிப்பு ஏற்றுமதியை ஊக்குவிப்பதுடன் இறக்குமதியைத் தடுக்கிறது.

(ii) வளரும் மற்றும் வளர்ந்த நாடுகள் ஏற்றுமதி பொருட்களுக்கு வரி விதிப்பதில்லை.

**வட்டார முன்னேற்றம் :**

(i) வட்டார வளர்ச்சியில் வரி விதிப்பு முக்கியப் பங்கினை வகிக்கிறது.

(ii) வரி விலக்குகளையும், வரிச்சலுகையையும் வளரும் நாடுகளுக்கு அளிப்பதன் மூலம் அப்பகுதிகளில் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு வணிக நிறுவனங்களைத் தூண்டுகிறது.

**பண விகிதத்தைக் கட்டுப்படுத்துதல் :**

வரி என்பது பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் கருவிகளுள் ஒன்றாக பயன்படுகிறது.

## கூடுதல் வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும். 1 மதிப்பெண்**

1. **இந்தியாவில் வருமான வரி ________.**

அ) நேரடி மற்றும் விகிதாச்சார வரி
ஆ) நேரடி மற்றும் வளர்விகித வரி
இ) மறைமுக மற்றும் வளர்விகித வரி
ஈ) மறைமுக மற்றும் விகிதாச்சார வரி

[விடை: ஆ) நேரடி மற்றும் வளர்விகித வரி]

2. **________ வரி கலால் வரி என்று அழைக்கப்படுகிறது.**

அ) நேர்முக வரி ஆ) மறைமுக வரி
இ) விற்பனை வரி ஈ) சுங்கத் தீர்வை

[விடை: ஈ) சுங்கத் தீர்வை]



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



**4. வரிக்கும் கட்டணத்திற்கும் உள்ள வேறுபாடுகளைக் கூறுக.**

| வ.எண் | வரி (Tax) | கட்டணம் (Payments) |
|---|---|---|
| 1. | வரி என்பது எந்தவித பிரதிபலனும் எதிர்பார்க்காமல் அரசாங்கத்திற்கு கட்டாயமாக செலுத்துகின்ற செலுத்துகையாகும். | கட்டணம் என்பது பணிகளை பயன்படுத்துவதற்காக செலுத்துவதாகும். |
| | பொதுவாக அரசாங்கத்தின் வருமான இனங்களில் ஒன்றாக வரி மேலோங்கியுள்ளது. | கட்டணம் என்பது ஒரு குறிப்பிட்ட நன்மைகளுக்கான தனிச் சலுகைகளைப் பெற்றிருந்தாலும், பொதுநல ஒழுங்கு முறையின் சிறப்பான முதன்மை நோக்கமாகும். |
| 3. | வரி என்பது கட்டாய செலுத்துகை ஆகும். | கட்டணம் என்பது தன்னார்வக் கட்டணமாகும். |
| 4. | ஒரு தனிப்பட்ட நபரின் மீது வரி விதிக்கப்பட்டால், அதனை அவர் செலுத்த வேண்டும் – இல்லையெனில் அவர் தண்டிக்கப்படுவார். | மாறாக, பணிகளை பெற விருப்பமில்லை எனில் கட்டணம் செலுத்தத் தேவையில்லை. |
| 5. | வரி செலுத்துபவர்கள் நேரடியாக எவ்வித சலுகைகளையும் எதிர்பார்க்க முடியாது. **உதாரணம் :** வருமான வரி, அன்பளிப்பு வரி, சொத்து வரி மற்றும் மதிப்புக் கூட்டு வரி (VAT). | கட்டணம் செலுத்துவதன் மூலம் நுகர்வோர்கள், நேரடியாக சலுகைகளைப் பெறுகின்றனர். **உதாரணம் :** முத்திரை வரி, ஓட்டுநர் உரிமக் கட்டணம் அரசாங்க பதிவுக் கட்டணம். |

☆ ☆ ☆





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

பொருளியல்

# அலகு 5 தமிழ்நாட்டில் தொழில்துறை தொகுப்புகள்




## கற்றலின் நோக்கங்கள்

- தமிழ்நாட்டின் தொழில்துறை தொகுப்புகளின் முன்னேற்றத்தின் வரலாற்றை அறிந்து கொள்ளுதல்.
- தமிழ்நாடு அரசின் கொள்கைகள் மற்றும் தொழில்துறை மேம்பாட்டு முகமைகளை அறிந்து கொள்ளுதல்.
- அரசின் கொள்கைகளின் தாக்கத்தை புரிந்து கொள்ளுதல்.
- தொழில் முனைவோரின் பங்கினைப் பற்றி அறிந்து கொள்ளுதல்.

## பயிற்சி

### I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. ஆசியாவின் டெட்ராய்ட் என அழைக்கப்படுவது ________**

அ) தூத்துக்குடி ஆ) கோயம்புத்தூர் இ) சென்னை ஈ) மதுரை

[விடை: இ) சென்னை]

**2. குழாய்கள் மற்றும் நீரிறைக்கும் இயந்திரம் பெருமளவில் உற்பத்தி செய்யப்படுவது ________**

அ) சேலம் ஆ) கோயம்புத்தூர் இ) சென்னை ஈ) தருமபுரி

[விடை: அ) கோயம்புத்தூர்]

**3. தூத்துக்குடி ________ என அழைக்கப்படுகிறது.**

அ) இந்தியாவின் நுழைவாயில் ஆ) தமிழ்நாட்டின் நுழைவாயில்

இ) குழாய் நகரம் ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

[விடை: ஆ) தமிழ்நாட்டின் நுழைவாயில்]

**4. ________ என்பது ஒரு நாட்டின் வளர்ச்சியில் முக்கிய அம்சமாகும்.**

அ) வேளாண்மை ஆ) தொழில்

இ) இரயில்வே ஈ) மேற்கண்ட எதுவுமில்லை [விடை: ஆ) தொழில்]

**5. திருப்பூர் ________ தொழிலுக்குப் பெயர் பெற்றது.**

அ) தோல் பதனிடுதல் ஆ) பூட்டு தயாரித்தல்

இ) பின்னலாடை தயாரித்தல் ஈ) வேளாண் பதப்படுத்துதல்

[விடை: இ) பின்னலாடை தயாரித்தல்]



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



**முக்கியமான தொழில்துறை கொள்கைகள் :**

(i) தமிழ்நாடு தொழில்துறை கொள்கை - 2014.
(ii) தொழில்துறை கொள்கை செயல்படுத்துதல் - 2015.
(iii) தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் கொள்கை - 2014.
(iv) தமிழ்நாடு SEZ களின் கொள்கை - 2013.
(v) தமிழ்நாடு பயோடெக்னாலஜி கொள்கை - 2014.
(vi) தமிழ்நாடு நான்காவது பெரிய மாநிலமாகும். இந்தியாவில் தமிழ்நாடு முன்னணி மாநிலங்களில் ஒன்றாக இடம் பெற்றுள்ளது.
(vii) பொறியியல், ஆடைகள், ஜவுளி பொருட்கள் போன்றவை எண்ணிக்கையின் அடிப்படையில் மாநிலங்களில் முதலிடத்தில் உள்ளது.

**தொழில்துறை கொள்கைகளின் குறிக்கோள்கள் :**

(i) அரசு நேரடி ஊக்குவிக்கும் முதலீட்டு திறன் புதிய உற்பத்தியில் தற்போதுள்ள தொழில்துறை தளத்திற்கு உதவுதல்.
(ii) அதன் ஆதாயங்களை ஒருங்கிணைத்து ஊக்குவிக்க மிகவும் போட்டித் தன்மையுடன் திறமையான உள்நாட்டு வளர்ச்சி மற்றும் ஏற்றுமதி சந்தைகளை மேம்படுத்துகிறது.
(iii) தனியார், பொது கூட்டாளர்களை உருவாக்குதல் மற்றும் செயல்படுத்தக் கூடிய சூழலை உருவாக்க கணிசமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலதனம் உள்கட்டமைப்பு ஆகியவற்றை பெற்றுள்ளது.

**6. தொழில்முனைவோரின் பங்கினைப் பற்றி விளக்குக.**

**தொழில் முனைவோரின் பங்கு :**

(i) தொழில் முனைவோர் கிராமப்புற மற்றும் பின்தங்கிய தொழிற்சாலைகளை முன்னேற்றுவதுடன், நாட்டில் பல்வேறு பகுதிகளில் நிலவும் வட்டார ஏற்றதாழ்வுகளை நீக்குகிறார்கள்.
(ii) இவர்கள் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மற்றும் தலா வருமானம் உயர்வதற்கு உதவி புரிகிறார்கள்.
(iii) வருமானம் மற்றும் செல்வத்தின் செறிவைக் குறைப்பதன் மூலம் அவை சமூகத்தின் வளர்ச்சிக்கு பங்களிக்கின்றன.
(iv) குடிமக்களின் அசையா சேமிப்புகள் மற்றும் நாட்டின் ஏற்றுமதி வியாபாரம் மூலமாக மூலதனத்தை செயல்பட வைக்கிறார்கள்.
(v) தொழில்முனைவோர் கைவினைஞர்கள், தொழில்நுட்ப தகுதி வாய்ந்த நபர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களுக்கு பெரிய அளவிலான வேலைவாய்ப்பை வழங்குகிறார்கள். மற்றும் தொழில் நுட்பத்தை மாற்றும் சூழலில் பணியாற்றி மேலும் புத்தாக்கத்தின் மூலம் இலாபத்தினை அதிகரிக்க முயற்சிக்கின்றனர்.
(vi) தொழில் முனைவோர், குறைந்த விலையில் சிறந்த தரமான பொருட்களைப் பெற மக்களுக்கு உதவுகின்றனர். இதன் விளைவாக இவர்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுகிறது.

## கூடுதல் வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும். 1 மதிப்பெண்**

**1. TIDCO தொடங்கப்பட்ட ஆண்டு .......... .**
அ) 1971 ஆ) 1970
இ) 1965 ஈ) 1966
[விடை: இ) 1965]

**2. சென்னை ........ டெட்ராய்ட் என அழைக்கப்படுகிறது.**
அ) தமிழ்நாட்டின் ஆ) ஆசியாவின்
இ) இந்தியாவின் ஈ) கேரளாவின்
[விடை: ஆ) ஆசியாவின்]

**3. காற்றாலை சக்தி ..........ல் இருந்து பெறப்படுகிறது.**
அ) காற்று ஆ) சூரிய ஒளி
இ) நீர் ஈ) எதுவுமில்லை
[விடை: அ) காற்று]

**4. ......... உருவாக்குவது 'தொழில் மயமாக்குதலின்' ஒரு முக்கிய நோக்கமாகும்.**
அ) உணவு உற்பத்தி
ஆ) நவீன உற்பத்தி முறை
இ) வேலைவாய்பை
ஈ) எதுவுமில்லை [விடை: இ) வேலைவாய்பை]

**5. .......... ஒரு நாட்டின் பொருளாதாரத்தை பாதுகாக்கவும் மற்றும் ஏற்றுமதி மூலம் அந்நிய செலாவணியை ஈட்டவும் உதவுகிறது.**
அ) தொழில் மயமாதல்
ஆ) தொழிற்துறை தொகுப்பு
இ) 'அ' மற்றும் 'ஆ' ஈ) எதுவுமில்லை
[விடை: அ) தொழில் மயமாதல்]





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



(ii) இந்தியாவில் அதிக அளவில் பொறியியல் கல்லூரிகள், பல் தொழில் நுட்ப கல்லூரிகள் மற்றும் தொழில் பயிற்சி மையம் நமது மாநிலத்தில்தான் உள்ளது.

**ஆ) உள்கட்டமைப்பு**

(i) மாநிலங்களில் உள்ள சிறிய நகரங்கள் மற்றும் கிராமங்களில் தொழில்மயமாதல் பரவுதலுக்கு மின்சார விநியோகம் சிறப்பான பங்கினை வகிக்கிறது. மின்சார விநியோகம் மட்டுமல்லாது, தமிழ்நாடானது மிகச் சிறந்த போக்குவரத்து உள்கட்டமைப்புக்குப் பெயர் போனது ஆகும்.

(ii) கிராமப்புற சிறு சாலை வசதிகளால் அருகிலுள்ள சிறு நகரங்களுடனும், பெரு நகரங்களுடனும் சிறப்பான முறையில் இணைக்கப்பட்டுள்ளது.

**இ) தொழில் துறை ஊக்குவிப்பு**

(i) கல்வி, போக்குவரத்து மற்றும் ஆற்றல் வாய்ந்த உள்கட்டமைப்புகளுக்கு முதலீடு செய்வது மட்டுமல்லாமல், சிறந்த தொழிற் பிரிவுக்கான தொழிற்சாலை விஸ்தரிப்புகளை சிறந்த பகுதிகளில் ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

(ii) பொருளாதார சீர்திருத்தத்திற்கு பின் குறிப்பிட்ட காரணிகளான தானியங்கி, தானியங்கிக் கருவிகள், உயிரி தொழில்நுட்பம் மற்றும் செய்தி மற்றும் செய்தித் தொடர்புக்கான பிரிவுகள் நல்ல முறையில் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது.

(iii) நாடு முழுவதும் பல இடங்களில் தொழில் துறை மேம்பாடு முகமைகளை அரசு நிறுவியுள்ளது.

**5. தமிழகத்தில் தொழில் விஸ்தரிப்புக்கு திறவுகோலாக செயல்படும் முகமைகள் யாவை? அவற்றை விளக்குக.**

**அ) தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம் (SIPCOT - State Industries Promotion Corporation of Tamil Nadu), 1971.**

தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம் (Sipcot) என்பது 1970ல் தொழில் முன்னேற்றத்திற்காக நிறுவப்பட்டு தொழிற் தோட்டங்களை அமைத்தது.

**ஆ) தமிழ்நாடு மாநில சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் (TANSIDCO - Tamil Nadu Small Industries Development Corporation) 1970**

(i) தமிழ்நாடு மாநில சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் (TANSIDCO) என்பது 1970ல் தமிழக அரசால் நம் மாநிலத்தில் சிறு தொழில் முன்னேற்றத்திற்காக நிறுவப்பட்ட ஒரு அரசு நிறுவனமாகும்.

(ii) சிறு தொழிற்பிரிவின் புதிய நிறுவனங்களுக்கு மானியம் மற்றும் தொழிற் நுட்ப உதவிகளையும் இந்த நிறுவனம் செய்கிறது.

**இ) தமிழ்நாடு தொழில் துறை மேம்பாட்டு கழகம் (TIDCO - Tamil Nadu Industrial Development Corporation) 1965**

நம் மாநிலத்தில் தொழில் தோட்டங்களை நிறுவுவதற்கும் தொழிற்சாலைகளை மேம்படுத்துவதற்கும் உதவும் மற்றுமொரு அரசு நிறுவனமாகும்.

**ஈ) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் - வரையறுக்கப்பட்டது (TIIC - Tamil Nadu Industrial Investment Corporation Ltd) 1949**

(i) புதிய தொழில் பிரிவுகளை நிறுவுவதற்கும் தற்போதுள்ள தொழில் பிரிவுகளை பெருக்குவதற்கும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகமானது குறைந்த அளவிலான நிதி உதவியைச் செய்கிறது.

(ii) அனைத்து வகையான தொழில் நிறுவனங்களுக்கும் இது உதவுகிறது.

**உ) தமிழ்நாடு சிறுதொழில் கழகம் - வரையறுக்கப்பட்டது (TANSI - Tamil Nadu Small Industries Corporation Ltd) 1965**

தொழில் மற்றும் வணிக நிறுவனங்களால் அமைப்புத் துறையில் நிறுவப்பட்டு, செயல்படுத்தப்பட்டு, வரும் சிறு தொழில் அமைப்புகளை 1965இல் தமிழ்நாடு சிறுதொழில் கழகமானது (TANSI) தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டது.

☆ ☆ ☆



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



# அரசு மாதிரி வினாத்தாள் - 2019-20

## பத்தாம் வகுப்பு

## சமூக அறிவியல்

கால அளவு : 15 நிமிடம் + 2.30 மணி மொத்த மதிப்பெண்கள்: 100

**அறிவுரை:** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் (அல்லது) கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**குறிப்பு:** இவ்வினாத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

### பகுதி - I

(மதிப்பெண்கள் : 14)

**குறிப்பு:** (1) இப்பகுதியில் உள்ள அனைத்து 14 வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

(2) கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் பொருத்தமான விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். **(14 × 1 = 14)**

1. இத்தாலி யாருடன் லேட்டரன் உடன்படிக்கையை செய்து கொண்டது?
(அ) ஜெர்மனி (ஆ) ரஷ்யா (இ) போப் (ஈ) ஸ்பெயின்

2. இந்திய தேசிய காங்கிரஸின் மூன்றாவது கூட்டம் எங்கு நடைபெற்றது?
(அ) மெரினா (ஆ) மைலாப்பூர்
(இ) செயின்ட் ஜார்ஜ் கோட்டை (ஈ) ஆயிரம் விளக்கு

3. சென்னை உயர்நீதிமன்றத்தின் முதல் இந்திய நீதிபதி யார்?
(அ) T. முத்துசாமி (ஆ) P.S. சிவசாமி
(இ) V.S. சீனிவாச சாஸ்திரி (ஈ) G.A. நடேசன்

4. இந்தியாவில் முதலில் ஒழுங்கமைக்கப்பட்ட சென்னை தொழிற்சங்கம் உருவாக்கப்பட்ட ஆண்டு
(அ) 1918 (ஆ) 1917 (இ) 1916 (ஈ) 1914

5. **கூற்று:** பிரிட்டிஷ் அரசு 1857 ஆம் ஆண்டு கிளர்ச்சியை இரும்புக்கரம் கொண்டு அடக்கியது.
**காரணம்:** மையப்படுத்தப்பட்ட தலைமை இல்லாததால் கிளர்ச்சி தோல்வி கண்டது.
(அ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே தவறு
(ஆ) கூற்று தவறு, காரணம் சரி
(இ) கூற்று மற்றும் காரணம் சரி. கூற்றுக்குக் காரணம் சரியான விளக்கமாகும்.
(ஈ) கூற்று மற்றும் காரணம் சரி. கூற்றுக்குக் காரணம் சரியான விளக்கமல்ல.

6. பொருந்தாததைத் தேர்ந்தெடுக்கவும்:
(அ) காதர் (ஆ) பாங்கர் (இ) வண்டல் மண் (ஈ) கரிசல் மண்

7. ஒரே அளவு மழைபெறும் இடங்களை இணைக்கும் கோடு
(அ) சமவெப்பக்கோடு (ஆ) சம மழைக்கோடு
(இ) சம அழுத்தக் கோடு (ஈ) அட்சக் கோடு

8. முதல் காகித தொழிற்சாலை தொடங்கப்பட்ட இடம்
(அ) ராணிகஞ்ச் (ஆ) துர்க்காபூர் (இ) ஹுக்ளி (ஈ) பாலிகஞ்ச்

9. மக்கள் தொகையின் பல்வேறு அம்சங்கள் பற்றிய அறிவியல் பூர்வமான படிப்பு
(அ) ஒளிப்படவியல் (ஆ) மக்களியல் (இ) ஆடற்கலையியல் (ஈ) மக்களடர்த்தி

10. தமிழ்நாட்டின் அட்சப்பரவல்
(அ) 8°5′வ - 13°35′வ (ஆ) 8°5′தெ - 13°35′தெ (இ) 8°0′வ - 13°5′வ (ஈ) 8°0′தெ - 13°05′தெ





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores





43. (இ) ராமலிங்க அடிகள்
   (i) ஜீவகாருண்யம் என்றால் என்ன?
   (ii) அருட்பா என்றால் என்ன?
   (iii) சமரச வேத சன்மார்க்க சத்ய சங்கத்தின் முக்கியப் பங்களிப்பைக் குறிப்பிடுக.
   (iv) தனது இலவச உணவகத்தை அவர் எங்கே அமைத்திருந்தார்?

   (ஈ) வேலூர் புரட்சி
   (i) வேலூர் புரட்சி எப்போது வெடித்தது?
   (ii) இராணுவத்தில் புதிய விதிமுறைகளை அறிமுகப்படுத்தியவர் யார்?
   (iii) புரட்சியின் போது முதலில் பலியானவர் யார்?
   (iv) புரட்சியாளர்களால் புதிய மன்னராக அறிவிக்கப்பட்டவர் யார்?

**Note :** Blind Candidates have to write only notes for the questions related to Map

**குறிப்பு :** பார்வையற்ற மாணவர்கள் வரைபடத்தில் இடங்களை குறிப்பிட்டுக் காட்டுவதற்கு பதிலாக அவற்றைப் பற்றிய குறிப்புகள் மட்டும் எழுத வேண்டும்.

44. கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் பின்வருவனவற்றை குறிக்கவும்.
   (i) ஆரவல்லி மலைத்தொடர்
   (ii) காவிரி ஆறு
   (iii) தென்மேற்கு பருவக்காற்று வீசும் திசை
   (iv) அகஸ்திய மலை உயிர்க்கோளப் பெட்டகம்
   (v) கரிசல் மண் காணப்படும் முக்கிய பகுதி
   (vi) ஏதேனும் ஒரு பன்னாட்டு விமான நிலையம்
   (vii) தமிழ்நாட்டில் உள்ள அணுமின் நிலையம்
   (viii) மும்பை முதல் கொல்கத்தா வரையிலான ரயில்பாதை

(அல்லது)

   கொடுக்கப்பட்டுள்ள தமிழக வரைபடத்தில் பின்வருவனவற்றை குறிக்கவும்.
   (i) நீலகிரி குன்றுகள்
   (ii) சோழமண்டல கடற்கரை
   (iii) ஏதேனும் நெல் விளையும் பகுதி
   (iv) பவானி சாகர் அணை
   (v) தூத்துக்குடி துறைமுகம்
   (vi) ஏதேனும் ஒரு பன்னாட்டு விமான நிலையம்
   (vii) பழவேற்காடு ஏரி
   (viii) கன்னியாகுமரி

## விடைகள்

### பகுதி - I

1. (இ) போப்
2. (ஈ) ஆயிரம் விளக்கு
3. (அ) T. முத்துசாமி
4. (அ) 1918
5. (இ) கூற்று மற்றும் காரணம் சரி. கூற்றுக்குக் காரணம் சரியான விளக்கமாகும்.
6. (ஈ) கரிசல் மண்
7. (அ) சமவெப்பக்கோடு
8. (ஈ) பாலிகஞ்ச்
9. (ஆ) மக்களியல்
10. (அ) 8°5′வ - 13°35′வ
11. (அ) (i), (iii), (iv), (ii)
12. (ஈ) 65
13. (ஆ) (iv)
14. (ஈ) அனைத்தும்



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



## பகுதி - IV

43. **(அ) பால்கன் போர்கள் :**

(i) மாசிடோனியாவைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதில் கிரீஸ், செரீபியா, பல்கேரியா பின்னர், மாண்ட் நீக்ரோ ஆகிய நாடுகள் இடையே போட்டிகள் நிலவின. 1912 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் அவை பால்கன் கழகம் என்ற அமைப்பை உருவாக்கின.

(ii) (1) பால்கன் கழகம் முதல் பால்கன் போரில் (1912 - 1913) துருக்கிய படைகளைத் தோற்கடித்தன.

(2) 1913 ஆம் ஆண்டு மே மாதம் லண்டன் உடன்படிக்கையின்படி அல்பேனியா என்ற புதிய நாடு உருவாக்கப்பட்டது. மாசிடோனியாவை ஏனைய பால்கன் நாடுகள் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டன.

(3) துருக்கி, கான்ஸ்டாண்டிநோபிளைச் சுற்றியுள்ள பகுதிகளை மட்டும் கொண்ட அரசாகச் சுருக்கப்பட்டது.

(iii) துருக்கியப் படைகள்.

(iv) 1913 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் கையெழுத்திடப்பட்ட புகாரெஸ்ட் உடன்படிக்கையோடு இரண்டாம் பால்கன் போர் முடிவடைந்தது.

**(ஆ) சுபாஷ் சந்திர போஸ் மற்றும் இந்திய தேசிய ராணுவம் :**

(i) 1943 பிப்ரவரி மாதம் நீர் மூழ்கிக் கப்பல் மூலமாக ஜப்பான் சென்றார்.

(ii) கேப்டன் லட்சுமிசெகல்

(iii) காந்தி பிரிகேட், நேரு பிரிகேட், பெண்கள் பிரிவாக ராணி லட்சுமிபாய் பிரிகேட் என மூன்று படையணிகளை சுபாஷ் சந்திரபோஸ் மறுசீரமைத்தார்.

(iv) தில்லிக்கு புறப்படு (தில்லிசலோ) என்ற முழக்கத்தை சுபாஷ் வெளியிட்டார்.

(அல்லது)

43. **(இ) ராமலிங்க அடிகள் :**

(i) ராமலிங்க அடிகள் அன்பையும் இரக்கத்தையும் செடி கொடிகள் உட்பட அனைத்து உயிரினங்களின் மேலும் காட்டினார். இதை அவர் ஜீவகாருண்யம் என்றாகும்.

(ii) திருவருட்பா.

(iii) சமரச சுத்தசன்மார்க்க சத்திய சங்கம் எனும் அமைப்பை நிறுவி தென்னிந்தியாவில் ஏற்பட்ட கொடிய பஞ்சத்தைக் கணக்கில் கொண்டு 1867ல் சாதி எல்லைகளைத் தாண்டி அனைத்து மக்களுக்குமான இலவச உணவகத்தை நிறுவினார்.

(iv) வடலூர்.

**(ஈ) வேலூர் புரட்சி :**

(i) 10 ஜுலை 1806.

(ii) தலைமைத் தளபதி சர் ஜான் கிரடாக்.

(iii) பேன்கோர்ட்

(iv) ஃபதே ஹைதர் என்பவர் புதிய மன்னராக அறிவிக்கப்பட்டார்.





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores





# சூராவின் மாதிரி வினாத்தாள் - 1

## பத்தாம் வகுப்பு

## சமூக அறிவியல்

கால அளவு : 15 நிமிடம் + 2.30 மணி மொத்த மதிப்பெண்கள்: 100

**அறிவுரை:** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் (அல்லது) கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**குறிப்பு:** இவ்வினாத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

### பகுதி - I

(மதிப்பெண்கள் : 14)

**குறிப்பு:** (1) இப்பகுதியில் உள்ள அனைத்து 14 வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

(2) கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் பொருத்தமான விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். **(14 × 1 = 14)**

1. "ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்" எனக் கூறியவர் யார்?
(அ) லெனின் (ஆ) மார்க்ஸ் (இ) சன் யாட் சென் (ஈ) மா சே துங்

2. திருச்சிராப்பள்ளி சுதந்தந்திரப் பிரகடனத்தை வெளியிட்டவர் யார்?
(அ) மருது சகோதரர்கள் (ஆ) பூலித்தேவர்
(இ) வீரபாண்டிய கட்டபொம்மன் (ஈ) கோபால நாயக்கர்

3. பன்னாட்டுச் சங்கம் உருவாக்கப்படுவதில் முன்முயற்சி எடுத்தவர் யார்?
(அ) ரூஸ்வெல்ட் (ஆ) சேம்பெர்லின் (இ) உட்ரோ வில்சன் (ஈ) பால்டுவின்

4. சென்னைக்கருகேயுள்ள உதயவனத்தில் சத்யாகிரக முகாமை அமைத்தவர் யார்?
(அ) K. காமராஜ் (ஆ) C. ராஜாஜி (இ) K. சந்தானம் (ஈ) T. பிரகாசம்

5. கூற்று: ஜோதிபா பூலே ஆதரவற்றோருக்கான விடுதிகளையும், விதவைகளுக்கான விடுதிகளையும் திறந்தார்.
காரணம் : ஜோதிபா பூலே குழந்தைத் திருமணத்தை எதிர்த்தார். விதவை மறுமணத்தை ஆதரித்தார்.
(அ) கூற்று சரி. ஆனால் காரணம் கூற்றுக்குப் பொருத்தமானதாக இல்லை.
(ஆ) கூற்று சரி. காரணம் கூற்றுக்குப் பொருத்தமானதாக உள்ளது.
(இ) இரண்டுமே தவறு.
(ஈ) காரணம் சரி. ஆனால் கூற்று பொருத்த மற்றதாக உள்ளது.

6. இந்தியாவின் தென்கோடி முனை
(அ) அந்தமான் (ஆ) கன்னியாகுமரி (இ) இந்திராமுனை (ஈ) காவரட்தி

7. தமிழ்நாட்டில் அதிக பரப்பளவில் மாங்குரோவ் காடுகள் காணப்படும் மாவட்டம் எது?
(அ) இராமநாதபுரம் (ஆ) நாகப்பட்டினம் (இ) கடலூர் (ஈ) தேனி

8. பொருந்தாததைத் தேர்ந்தெடுக்கவும்
(அ) வெள்ளப் பெருக்கு கால்வாய் (ஆ) வற்றாத கால்வாய்
(இ) ஏரிப்பாசனம் (ஈ) கால்வாய்

9. தமிழ்நாட்டு மக்களின் இரண்டாவது முக்கிய உணவு பயிர்
(அ) பருப்பு வகைகள் (ஆ) சிறுதானியங்கள்
(இ) எண்ணெய் வித்துக்கள் (ஈ) நெல்

10. எளிதில் செல்லமுடியாத பகுதிகளுக்கு பயன்படும் போக்குவரத்து
(அ) சாலைப்போக்குவரத்து (ஆ) இரயில் போக்குவரத்து
(இ) வான்வழிப் போக்குவரத்து (ஈ) நீர்வழிப் போக்குவரத்து



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



27. (i) தொழில் தொகுப்புகள் என்பது பொதுவான சந்தைகள் தொழில்நுட்பங்கள் மற்றும் திறன்களுக்கான தேவைகளை பகிர்ந்துகொள்ள வரையறுக்கப்பட்ட புவியியல் பகுதியில் உள்ள நிறுவனங்களின் தொகுப்புகளாகும்.

(ii) தொகுப்புகளின் முக்கிய அம்சம் நிறுவனங்களுக்கிடையேயான ஒரு பரஸ்பர தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதாகும்.

28. வங்களா விரிகுடாவில் இருந்து வீசும் தென்மேற்கு பருவக்காற்று கிடை நேரடியாக மௌசின்ராம் மலை முகடுகளை முட்டிக் கொண்டே இருப்பதால் அங்கு மழை அதிக அளவில் பெய்கிறது. மௌசின்ராம் சராசரி மழைப் பொழிவின் அளவு 11,861 மி.மீ. எனவே உலகிலேயே மிக அதிக அளவு மழைபெறும் பகுதி மௌசின்ராம் ஆகும்.

## பகுதி - III

29. (i) 1902 (ii) சரளை மண் (iii) ஆளுநர்
(iv) வரி (v) பாங்கர்

30. (i) டோங்கிங் – கொரில்லா நடவடிக்கைகள்
(ii) வோல்கா – ஸ்டாலின் கிரேடு
(iii) அய்யா வழி – வைகுண்ட சுவாமிகள்
(iv) நானா சாகிப் – பேஷ்வா இரண்டாம் பாஜி ராவ்
(v) 16 ஆகஸ்ட் 1946 – நேரடி நடவடிக்கை நாள்

31. (i) குளிர்காலம் – ஜனவரி முதல் பிப்ரவரி வரை
(ii) யமுனை – கங்கை ஆற்றின் துணை ஆறு
(iii) வடகிழக்குப் பருவக்காற்று – அக்டோபர் முதல் டிசம்பர் வரை
(iv) டெகிரி அணை – இந்தியாவின் உயரமான அணை
(v) இரும்பு தாது – மேக்னடைட்

32. அ. (i)

| | வண்டல் மண் | கரிசல் மண் |
|---|---|---|
| (i) | வெளிர் நிறமுடைய மணற்பாங்கான மண். | கருப்பு நிறமுடைய மண். |
| (ii) | சிற்றோடைகள் மற்றும் ஆறுகளின் படிய வைத்ததினால் உருவாகின்றன. | தக்காணப் பகுதிகளில் உள்ள பசால்ட் பாறைகளில் இருந்து உருவானது. |
| (iii) | இம்மண் கங்கை மற்றும் பிரம்மபுத்திரா ஆற்றுப் பள்ளத்தாக்குகள், உத்திர பிரதேசம், பஞ்சாப், ஹரியானா, மேற்கு வங்கம் மற்றும் பீகார் மாநிலங்களில் உள்ள சமவெளிப் பகுதிகளில் காணப்படும். | இம்மண் மகாராஷ்டிரா மற்றும் மாளவப் பீடபூமி, கத்தியவார் தீபகற்பம், தெலுங்கானா, ஆந்திர பிரதேசத்தில் உள்ள ராயல் சீமா ஆகிய பகுதிகளில் காணப்படும். |
| (iv) | நெல், கோதுமை, கரும்பு, எண்ணெய் வித்துக்கள் போன்ற பயிர்கள் இம்மண்ணில் பயிரிடப்படுகின்றன. | பருத்தி, திணை வகைகள், புகையிலை மற்றும் கரும்பு ஆகிய பயிர்கள் இம்மண்ணில் பயிரிடப்படுகின்றன. |

(ii)

| | சாலை வழி போக்குவரத்து | இரயில் வழிப் போக்குவரத்து |
|---|---|---|
| (i) | தார் சாலையில் பயணம் செய்யலாம். | இருப்பு பாதையில் பயணம் செய்யலாம். |
| (ii) | கிராமங்களை இணைக்கும். | பெரு நகரங்களை இணைக்கும். |
| (iii) | இது குறுகிய மற்றும் நீண்ட தூரத்திற்கு பயணிகள் மற்றும் சரக்குகளை கொண்டு செல்லும். | இது அதிக அளவு பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்தை கொண்டு செல்லும். |
| (iv) | எ.கா. பேருந்து, லாரி, கார் போன்றவை சாலை வழியில் பயன்படுத்தப்படும் வாகனங்கள். | எ.கா. இரயில் மட்டுமே இருப்புப் பாதையில் செல்லும். |

(ஆ)

**காரணம் :** இந்தியா வெப்பமண்டல பருவக்காற்று காலநிலையைப் பெற்றுள்ளது. இக்காலநிலை பருவக் காலங்களில் சீரற்ற, நிலையற்ற மழைப் பொழிவை தருகிறது. இதனால் பெரும்பாலான நேரங்களில் மழைநீர் குறைவாகவே கிடைக்கிறது. எனவே கிடைக்கும் மழைநீரை சேமிப்பது மிகவும் அவசியமாகிறது.






orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



(ஆ)




★★★



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 /8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com